Registered as a news paper.  பக்கங்கள்: பன்னிரண்டு  விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது  பாதுகாப்பானது  நம்பகமானது
விரைவாக கடிதங்களை
THIRUMURUGAN COM NET
259,கே.கே.எஸ்
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
பலநோக்கு கூ.ச.முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 09 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 11 (24.12.2004) வெள்ளிக்கிழமை இதழ்:85

# பெண் புலிகளின் இடுப்புப் பட்டியை அகற்றுமாறு இராணுவம் நிர்ப்பந்தம்!

## வன்னிக்கான பயணம் ரத்தானது

(கிளிநொச்சி)

பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிந்து கொண்டுசெல்ல இராணுவத்தினர் அனுமதி மறுத்ததால் நேற்று மட்டக்களப்பிலிருந்து வன்னிக்குப் பயணத்தை மேற்கொள்ளவிருந்த 50 போராளிகளின் பயணம் தடைப்பட்டது.

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் மற்றும் 20 பெண் போராளிகள் அடங்கலாக 50 போராளிகள் நேற்று மட்டக்களப்பிலிருந்து வன்னி செல்வதற்கான ஏற்பாடுகள் வழமைபோல் செய்யப்பட்டிருந்தன.

செலங்கலடி - பதுளை வீதியிலுள்ள கொடுவாமடு பாலத்திலிருந்து ஓமந்தைவரை இராணுவ பாதுகாப்புடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடனும் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பயணத்துக்காக விடுதலைப் புலிப் போராளிகள் கொடுவாமடு பாலம் முன்னணி இராணுவ காவல் நிலையை அடைந்தபோது, அங்கு பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ கப்டன் - பெண் போராளிகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை அதிகாரிகள் உடனடி இடமாற்றம்!

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கடற்படையின் உயர் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி கடற்படையின் நடவடிக்கைப் பணிப்பாளர் நாயகம் றியர் அட்மிரல் சரத் வீரசேகர கிழக்குப்பகுதி கட்டளை அதிகாரியாகவும், றியர் அட்மிரல் வசந்த தென்னக்கோன் வடபகுதி கட்டளை அதிகாரியாகவும், வடபகுதி கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய நடவடிக்கைப் பணிப்பாளராகவும், கிழக்குப்பகுதி கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் உபாலி ரணவீர கடற்படை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# எந்த சவாலையும் எதிர்கொள்ள படையினர் தயாராக உள்ளனர்!

## இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட கூறுகிறார்



(கொழும்பு)

நன்கு தயார்ப்படுத்தப்பட்ட நிலையில் எந்தவொரு சூழ்நிலையை எதிர்கொள்வதற்கும் தயாரான நிலையில் இலங்கை இராணுவம் இருப்பதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.

தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் - புதிதாக இராணுவத்தில் இணைந்து பயிற்சிகளை முடித்த இளநிலை அதிகாரிகளை இராணுவத்தில் உத்தியோகபூர்வமாக இணைத்துக்கொள்ளும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

சண்டைக்காலமோ சமாதானக் காலமோ நாட்டுக்கு ஏற்படக்கூடிய எந்த அச்சுறுத்தலையும் சமாளிக்கும் வகையில் இராணுவம் உயர்ந்தபட்ச தயார் நிலையில் இருக்க வேண்டும்.

இராணுவத்தின் இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## றிச்சட் ஆர்மிரேஜுடன் மிலிந்த சந்தித்துப் பேச்சு

(நியூயோர்க்)

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் மற்றும் கிறிஸ்ரீனா றொக்கா ஆகியோரை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

அத்துடன், அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் சிரேஷ்ட ஆலோசகரான ஜோன் போல்டனையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார்.

இவர்களுடனான சந்திப்பில் இலங்கை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எந்த நகர்வையும் மேற்கொள்ள முடியாத நிலையில் அரசாங்கம்

### ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியை இணைத்துக் கொண்டோ அல்லது விலக்கிவிட்டோ எந்த எதிர்கால அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நெருக்கடிக்குள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இறுகிப் போயிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி ராஜித சேனாரத்தின தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசும்போது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தமது எதிர்காலப் பயணத்தை மேற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யுனிசெவ் அதிகாரிகள் குழு தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!





(கிளிநொச்சி)

யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரெட் சாய்பான் தலைமையிலான குழுவினருக்கும், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்குமிடையில் நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் சிறுவர்களின் போஷாக்கின்மை, மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி, இதற்கு கல்விச் செயற்பாட்டில் போதியளவில் வசதியின்மை மற்றும் பாடசாலைகளில் ஆசிரியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை போன்றவற்றுடன்,

அண்மையில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினை அடுத்து சிறுவர்கள் மற்றும் குடும்பங்கள் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளமை, மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பால் அந்த இடங்களிலுள்ள மக்களும் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்வது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் 2005 ஆம் ஆண்டு இந்த நடவடிக்கைகள் தொடர்பாக விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் குறித்து தமிழ்ச்செல்வன் தெளிவுபடுத்தினார். இதன்படி மாவட்ட ரீதியாக குழுக்களை அமைத்து பெற்றோர்களுடனான தொடர்புகளை ஏற்படுத்தி சிறுவர்கள் மற்றும் அவர்களுக்கான ஊட்டச்சத்து வழங்கல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக தெளிவுபடுத்தியதுடன், கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சிறுவர்களுக்கான விசேட குழு உறுப்பினர் பரணி மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீளக் குடியமர அனுமதிக்குமாறு

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வரணியைச் சேர்ந்தவர் முறைப்பாடு!

தனது சொந்த வீட்டில் மீளக் குடியமர படையினரிடம் அனுமதி பெற்றுத்தருமாறு கோரி வரணி எருவிலைச் சேர்ந்த அரச ஊழியர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி முகவரியில் வசித்து வரும் சங்கரப்பிள்ளை சுப்பையா என்பவரே தமது சொந்த வீட்டில் குடியிருக்க அனுமதி கோரியுள்ளார்.

1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தென்மராட்சி பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து சென்ற இவர் மீண்டும் தனது வீட்டில் குடியிருக்கச் சென்ற போது அவை இராணுவமுகாம்களாக மாற்றப் பட்டிருந்தமை தெரியவந்தது.

தனது வீட்டில் குடியிருக்க அனுமதிக்கக் கோரி சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு கடிதம் மூலமும் நேரில் சென்றும் கோரிக்கை விடுத்தும் அனுமதிவழங்கப்படவில்லை.

தான் இதுவரை 21 வீடு கள் இடம்மாறி ஆயிரம் ரூபா மாத வாடகை செலுத்தி வாடகை வீட்டில் குடியிருந்து வருவதாகவும் தற்போது தங்கியுள்ள வீடும் தைமாதத்துடன் குடியிருப்பதற்கான காலம் முடிவடைகின்றது என்றும் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.தனது சொந்த வீட்டில் தங்கியிருக்காத நிலையில வாடகை வீடுதேடி விரக்தியடைந்த நிலையில் தனது முறைப்பாட்டை தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா யாழ்மாவட்ட கட்டளை அதிகாரி தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோரிடமும் இவா கோரிக்கை விடுத்துள்ளார். (29)

## பெரியாழ்வார் ஆசிரமத்தில் இன்னிசை விருந்து

(வடமராட்சி)

புலோலி வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான வளவில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆசிரமத்தில் வாரந்தோறும் இடம்பெற்றுவரும் கலை நிகழ்வுகள் வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிப்பூசை நிறைவு பெற்றதும் ஞானசம்பந்தர் கலைமன் றம் வழங்கும் இன்னிசை விருந்து நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாட்டு : திருமதி ஜெயபாரதி கௌசிகன், ஜெய கௌரி செல்வமோகன் ஆகியோரும் வயலின் அ.ஜெயராம், மிருதங்கம் த.பார்த்தீபன், முகர்சிங் கே.மோகன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (14)

## கிராம பிரதடஷண விழா

தெல்லிப்பளை கிழக்கு சித்தியம்புளியடி சித்தியம்பதி அன்னமார் தேவஸ்தானத்தில் வருடாந்த கிராம பிரதட்ஷண விழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி அதிகாலை 5.00 மணிக்கு விசேட அபிசேகப் பூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள் இடம்பெற்று காலை 7.30 மணிக்கு அண்ணமார் பெருமான் ஊர்வலத்திற்காக எழுந்தருளி கிராமம் ஊடாக வருகை தந்து இரவு ஆலயத்தை வந்தடைவார் என அண்ணமார் ஆலய நிர்வாகசபை தெரிவித்துள்ளது.

## வைத்தியசாலை இடமாற்றம்

யாழ் - நாவலர் வீதி பிறவுண் வீதிச் சந்தியில் இயங்கிவந்த அரச கால்நடை வைத்தியர் அலுவலகம் பலாலி வீதி கந்தர்மடத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரனின் வீட்டிலேயே இந்த கால்நடை வைத்தியசாலை இடம்மாற்றப்பட்டுள்ளதாகவும், அங்கு அதன் வழமையான செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (111)

# சமய அறிவுப் போட்டி ஏற்பாடுகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவ மாணவியருக்கிடையே இந்த ஆணடுக்கான ஐந்து பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு வட மராட்சி, தென்மராட்சி, வலிகாமம், த்வகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 05 வலயங்களிலுள்ள 30 பாடசாலைகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மாணவர்கள் தாம் விரும்பும் எந்தவொரு பரீட்சை நிலையத்திலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை சைவ சமய விவகார குழுவின் தலைவர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

# கலைப் பேரரசு விருது வழங்கல் நிகழ்வு நாளை மறுதினம்

செல்லையா மெற்றாஸ் மயிலுக்கு கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருது வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதின மண்டபத்தில் மாலை 4. மணிக்கு கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கினை ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் செ.சிவஞானம் ஏற்றிவைக்கவுள்ளார். தொடர்ந்து நல்லை ஆதின முதல்வர் ஆசியுரையும், செஞ்சொற் செல்வன் ஆறு.திருமுருகனின் வாழ்த்துரையும், பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலைப் பேரரசு ஏ.ரி.பொனனுத்துரையின் கலைப்பங்களிப்பு தொடர்பாக சிறப்புரையையும் வழங்கவுள்ளார்.


## இறுத்க் கிருத்திய அழைப்பிதழ்



அன்புடையீர்,

10-12-2004 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த

எங்கள் குடும்பத் தந்தை

### கலாநிதி க. சொக்கலிங்கம்(சொக்கன்)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் 26-12-2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும். அந் - நிகழ்வில் கலந்து கொள்வதுடன், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அவரது அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தங்களிடம் நேரில் வந்து அழைக்கமுடியாமைக்கு வருந்துகிறோம். மன்னியுங்கள்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சார்பில்
சொ. விமலன்

திருவள்ளுவர் அச்சக நிலையம்,
593, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(1003)


# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் தமிழக முதல்வரான அமரர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இன்று முதல் மூன்று நாட்கள் நடைபெறவுள்ளன.

இந்த விழா தாவடிப் பிள்ளையாா ஆலய திறந்தவெளி அரங்கில் அனைத்துலக எம்.ஜி.ஆர் இளைஞர் அணித்தலைவர் பொன்.விஜயகாந் தலைமையில் நடைபெறும்.

இன்றும் நாளையும் குருநகர், பாசையூரில் உள்ள எம்ஜி.ஆர் சிலைகளுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வும், சனசமூக நிலையங்களில் எம்.ஜி.ஆர் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வுகளும் நடைபெறுவதுடன் நாளை மறுதினம் கலைநிகழ்வுகளும் இடம் பெறும்.

# மதுப்பிரியர்களால் பெரும் அசௌகரியம்

(கோண்டாவில்)

கோண்டாவில் பகுதியில் மது அருந்துவோரால் தொல்லைகள் அதிகரித்துள்ளன.இவ்வாறு அதிகரித்துள்ள தொல்லைகளால் இந்தப் பகுதி மக்கள் தரப்பிலிருந்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கோண்டாவில் டிப்போ அருகாமையில் மது விற்பனை நிலையங்கள் அமைந்துள்ளதால் அங்கு மது அருந்திவிட்டு வீதிகளில் கூடிநிற்கும் இந்த நபர்கள் வீதியால் செல்வோர் மீது தகாத வார்த்தைகளைப் பிரயோகிப்பதோடு வீண் வம்புகளிலும் ஈடுபட்டு கைகலப்பிலும் ஈடுபடுகின்றனர். அதோடு சைக்கிள, மோட்டார் சைக்கிள்கள் என்பன வீதியின் குறுக்கே நிறுத்தப்படுவதனால் போக்குவரத்திலும் இடையூறு விளைவிக்கப்படுகின்றது.

இதனால் இந்த வீதியால் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பெரும் சிரமத்துக்குள்ளாவதோடு, விசனமும் தெரிவித்துள்ளனர். (82)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம் 23 - 04 - 1978

மரணம் 05 - 01 - 2004



### அமரர் - பாஸ்கரதேவன் ஜெயறஞ்சன்

"நெஞ்சிருக்கும் வரை நெருப்பாய் – உன்
நினைவிருக்கும்,
அது வரை நிம்மதியற்று – எம்
உயிரிருக்கும்"

ப.தில்லைநாதன் (மாமா)
உடுவில்கிழக்கு,
இணுவில்.

(1001)



கிறீஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு

**மலிவு விற்பனை**



24 மணி நேரமும் புறொயிலர் இறைச்சிக் கோழிகள்
மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம்.
ஒட்டுமாங்கன்று, தேசி, தோடை மற்றும் கனிமரக் கன்றுகள், பூக்கன்றுகள், பூச்சாடிகள்
போன்றவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:-

**நாகம்ஸ் பாம்**

[வட்டு.இந்துக்கல்லூரி அருகாமை]
சித்தங்கேணி.

077-6331518
077-6654335

(3514)





## அமரர் எம்.ஜி.ஆரின் 17 வது நினைவலைகள்

24.12.2004 முதல் 17.01.2005 வரை

நம் நாட்டில் பிறந்து,
தமிழ் நாட்டில் வாழ்ந்து.
சினிமாவிலும், அரசியலிலும்
தனிப்பிறவி என தனக்கென
தனியிடம் வகித்த புரட்சித் தலைவர்

☆ கோழைத்தனமான அடிமை வாழ்வின் விலங் கொடிக்கும் **கொள்கை மன்னனாக**

☆ ஏழை எளியோரின் துயர் துடைக்கும் இரக்க மனம் கொண்ட **கொடை வள்ளலாக**

☆ நாட்டுப் பற்று மிக்க **புரட்சி நடிகராக**

☆ சினிமாவில் நடித்தது மட்டுமன்றி, நிஜமான வாழ்விலும் வாழ்ந்து காட்டிய மறைந்த எங்கள் வாத்தியார், **முன்னாள் தமிழக முதல்வர் மக்கள் திலகம் அமரர் எம்.ஜி.ஆர்** அவர்களை நினைத்துப் போற்றுவதில் பெருமையடைகின்றோம்

நம் நாட்டில் (கண்டியில்) பிறப்பு - 17.01.1917
தென்னாட்டில் (தமிழகத்தில்) இறப்பு - 24.12.1987

தமிழீழ எம்.ஜி.ஆர். ரசிகர்கள்.

(C/3499)

விளம்பர அனுசரணை

**இசையருவி**

ஒலிப்பதிவுக் கலைக்கூடம், தாவடிச் சந்தி, கொக்குவில்.
எம்.ஜி.ஆர் திரைப்படப்பாடல்கள், வீடியோ CD, ஓடியோ CD
கசற்றுக்களில் எம்மிடம் கிடைக்கும் (விசேட சலுகையுடன்)



**நாதன்ஸ்** யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)

இன்று மட்டும்
கா.நேரம் 10.30. 2.30 (பு.நே)
விக்ரம், கிரன், மனோரமா நடித்த
**ஜெமினி** (ரீல்ஸ்)
தினசரி - 6.30, 9.30 (பு.நே)
(ஆங்கிலப்படம்)
**URASSIC PARK - 3**
அடுத்த வெளியீடு - மம்முட்டி நடித்த **விஷ்வதுளசி**

**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று மட்டும்
அர்ஜுன், ரீமாசென், வடிவேல், தேவயானி, பிரகாஸ்ராஜ்
**கிரி** (ரீல்ஸ்)
(இயக்கம் சுந்தர்C)
புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 மட்டும்

**நிரஞ்சனாஸ்** சங்கானை

தனுஷ், தியா நடித்த
**ட்ரீம்ஸ்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
**THE MUMMY RETURNS**

**நாகம்ஸ்** சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
அர்ஜுன் (இருவேடம்). சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த
**விஜய் சூர்யா**
கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்களுக்கிடையிலான மொழித் தொடர்பின்மையே நாட்டின் இனப்பிரச்சினைக்கு முக்கிய காரணம்!

## அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

அரச கரும மொழியாகத் தமிழ் மொழி பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலும், அதற்கான அந்தஸ்து இதுவரை வழங்கப்படவில்லை.

இன்று இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு இதுவும் ஒரு காரணம். எனவே இது குறித்து அரசாங்கமும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கவனத்தில் எடுக்கவேண்டும் என்று அரசியலமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

இலங்கைப் பொலிஸ் திணைக்கள அதிகாரிகளுக்குக் குறுகிய காலத்தில் தமிழ் மொழியைப் பயிற்றுவிக்கும் பாடத்திட்டம் கடந்த திங்கட்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு, இனங்களுக்கிடையிலான மொழித் தொடர்பின்மையே முக்கிய காரணம்.

நாட்டில் 25 சதவீதமான மக்கள் தமிழ்மொழி பேசுபவர்கள். எனவே தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவேண்டியது அவசியமாகும். ஆனால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்து ஆக்கபூர்வமான முறையில் செயற்படுவதாகத் தெரியவில்லை.

மொத்தத் தமிழ் மக்களில் 52 சதவீதமானோர் வட-கிழக்குக்கு வெளியே வாழ்கின்றனர். எனவே தமிழ எம்.பிக்கள் வட-கிழக்கு குறித்து மட்டும் பேசுவதில் அர்த்தமில்லை.

புலிகளின் தலைவர் பிரபாகரனையும், ஜனாதிபதி சந்திரிகாவையும் நேரில் சந்தித்துப் பேசவைத்தால், 50 சதவீதமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும். தொடர்பின்மை, சந்தேகம் என்பனவே பிரச்சினைகளுக்கு மூல காரணமாகும்.

எனவே அரச ஊழியர்கள் மற்றும் பொலிஸார் அனைவரும் கட்டாயம் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

இனிவரும் காலங்களில் அரச சேவைக்கு ஆட்களைச் சேர்க்கும் போது, சேர்க்கும் முறைகள் மாற்றியமைக்கப்படவுள்ளன.

அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் பெரும்பான்மை இனத்தவர்கள் தகுதிகாண் காலப்பகுதிக்குள் தமிழ் மொழியையும் கற்றுக் கொள்ளவேண்டும். இல்லாவிடின் அந்த ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படமாட்டார்கள்.

இவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்றுக்கொடுக்க அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

தமிழ் மக்கள் சிங்கள மொழியைக் கற்பதில் காட்டும் ஆர்வத்தை, சிங்கள மக்கள் தமிழ் மொழியைக் கற்பதில் காட்டுவதில்லை என அவர மேலும் தெரிவித்தார். (தே)

## ஜப்பான் வெளியுறவு செயலர் 28 ஆம் திகதி கொழும்பு வருகை

(கொழும்பு)

ஜப்பானிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் நாடாளுமன்ற செயலர் ஹெய்சீரோ கொரசீமா எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு வரும் அவர் - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல அரசியற் பிரமுகர்களையும் சந்தித்து உரையாடவுள்ளார்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜப்பானுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச மன்னிப்பு சபையின் பிரதிநிதியென கொழும்பில் உரையாற்றியவருக்கும் நோர்வேக்கும் எவ்வித தொடர்புமில்லை

### நோர்வே கிளை அறிவிப்பு

கடந்த சனிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டில் நோர்வேயைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதியெனத் தெரிவித்து உரையாற்றிய போல்க் றொவிக்கிற்கும், தமது அமைப்புக்கும் எந்தவிதத் தொடர்புமில்லையென நோர்வே மன்னிப்புச்சபையின் ஜோன் பி.எகீனஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தமிழ்நெற் இணையதளத்துக்குத் தெரிவித்துள்ளதாவது -

சர்வதேச மன்னிப்புச் சபையின் நோர்வே கிளையில், பேச்சாளர் என யாரும் நியமிக்கப்படவில்லை. இது தொடர்பாக இலங்கையிலுள்ள பத்திரிகைகள், மன்னிப்புச் சபையின் பேச்சாளர் கொழும்பில் உரையாற்றவுள்ளதாகத் தெரிவித்து, செய்திகள் வெளியிட்டிருந்தமை தொடர்பாக எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

எனவே, இது தொடர்பாகக் கொழும்பிலுள்ள பத்திரிகைகளுக்கு நாம் கடந்த 16 ஆம் திகதி தொலைநகல் ஒன்றை அனுப்பியிருந்தோம். அதில் நோர்வே மன்னிப்புச்சபை அல்லது சர்வதேச மன்னிப்புச் சபையில் குறித்த நபர் எந்தவித தொடர்பும் அற்றவர் எனத் தெரிவித்திருந்தோம்.

நீங்கள் மன்னிப்புச் சபையின் பேச்சாளரெனத் தெரிவித்த றொவிக்கை பேட்டியெடுக்க விரும்பினால், அவர் மன்னிப்புச் சபையின் பேச்சாளர் அல்ல என்பதையும் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவேண்டும் என தாம் தெரியப்படுத்தியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த இந்தக் கூட்டம் நோர்வேக்கு எதிரானவர்களான கடும்போக்குக் கொண்ட தென்பகுதி சிங்கள அமைப்பால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## எஸ்.பியை விடுதலை செய்யக்கோரும் மகஜரில் கையொப்பமிடவில்லையாம்!

### மல்வத்த மகாநாயக்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் ஒருவரை அந்தத் தண்டனையிலிருந்து விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுப்பது தார்மீகம் அல்ல என மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவித்துவரும் எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோரி தயாரிக்கப்பட்டுள்ள மகஜரில் தானும் ஒப்பமிட்டுள்ளதாக வெளியாகிய தகவல்கள் பொய்யானவை எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய சமய கலாசார விடயங்கள் சம்பந்தமான மகஜரைக் கையளிக்கும் பொருட்டு இலங்கை பிக்குமார் சங்கத்தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் காலை மல்வத்த பீடாதிபதியைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரு தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோரும் மகஜரில் நான் கையொப்பமிட்டுள்ளதாகக் கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நான் அவ்வாறு கையொப்பமிடவில்லை. நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுக்க என்னால் முடியாது. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டபோது கூட, அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க எனக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (தே)

## புலிகளுடன் பேச முன்னர் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்!

### அஸ்கிரிய பீடாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு முன்னர் - ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய திப்பிட்டுவ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்தார்.

அகில இலங்கை பௌத்த மத குருமார் சங்கத்தின் தலைவர் சங்கைக்குரிய டொக்டர் கம்புயூகமுவே வஜ்ரதேரரைச் சந்தித்த சமயம் அஸ்கிரிய பீடாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினை மற்றும் கலாசார விடயங்கள் சீர்குலைதல் என்பன தொடர்பாக, அரசாங்கத்திடம் பேச்சுக்களை நடத்தவென மூன்று பீடங்களின் பௌத்த குருமார்கள் அடுத்த மாதம் அரசாங்கத்தை சந்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அஸ்கிரிய பீடாதிபதி மேலும் தெரிவித்தார்.

## தென்னாசியப் பிராந்தியத்தின் சிறந்த தலைவர்களை தெரிவுசெய்ய 16 பேரின் பெயர்களை பி.பி.சி வெளியிட்டது

தெற்காசியப் பிராந்தியத்தின் சிறந்த தலைவர்களைத் தெரிவு செய்வதற்காக 16 தலைவர்களது பட்டியலை பி.பி.சி செய்தி சேவையின் தெற்காசிய பிராந்திய ஒலிபரப்புப் பகுதி வெளியிட்டுள்ளது.

இவர்களுக்கு இணையத்தளம் ஊடாக நேயர்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் இவர்களுக்கான புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

பி.பி.சி செய்தி சேவையினால் வெளியிடப்பட்டுள்ள பட்டியியலில் 5 இந்தியர்களும், 3 இலங்கையர்களும் அடங்குகின்றனர். பி.பிசி செய்திச் சேவையினால் வாக்களிப்பதற்காக சிபார்சு செய்யப்பட்ட தெற்காசிய தலைவர்களது விபரம் வருமாறு -

அகமது ஷா மசூத் (ஆப்கானிஸ்தான்), அடல் பிகாரி வாஜ்பாய் (இந்தியா), ஜே.ஆர்.ஜெயவர்த்தன (இலங்கை), பி.பி.கொய்ராலா (நேபாளம்), சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (இலங்கை), இந்திரா காந்தி (இந்தியா), ஜவஹர்லால் நேரு (இந்தியா), மகாத்மா காந்தி (இந்தியா), முகமது அலி ஜின்னா (பாகிஸ்தான்), ஷெய்குத் முஜிபூர் ரஹ்மான் (பங்களாதேஷ்), சிறிமாவோ பண்டாரநாயக்கா (இலங்கை), சுபாஸ் சந்திரபோஸ் (இந்தியா), சுல்பிகார் அலிபூட்டோ (பாகிஸ்தான்), சியாடர் ரஹ்மான் (பங்களாதேஷ்), ஷகிர் ஷா (ஆப்கானிஸ்தான்), ஷியா உல் ஹக் (பாகிஸ்தான்).

## திருமலை அரசியற் பொறுப்பாளரை வழிமறித்த மகிந்தபுரம் படையினர்!

(திருகோணமலை)

நேற்றுமுன்தினம் காலை திருகோணமலை - மூதூரில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த திருக்கோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனை மகிந்தபுரம் இராணுவ சோதனைச் சாவடியின் ஊடாக தொடர்ந்து செல்வதற்கு படையினர் அனுமதிக்கவில்லை.

அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்த நீங்கள், மீண்டும் உங்கள் பகுதிக்கு செல்வதானால் உயரதிகாரியின் அனுமதி பெற்ற பின்னரே செல்ல முடியும் என படையினர் தெரிவித்தனர்.

படை உயரதிகாரியிடம் அனுமதி கிடைத்த பின்னர் சுமார் 15 நிமிடங்கள் கழித்தே மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரும், அவருடன் சென்ற போராளிகளும் தொடர்ந்து செல்வதற்கு படையினர் அனுமதியளித்தனர்.

கடந்த சனிக்கிழமையும் இவ் [illegible] பறித்தான் இராணுவ காவலரணில் அரசியற்துறை பொறுப்பாளர் சி.எழிலனுக்கும் அவருடன் சென்ற போராளிகளுக்கும் நடைபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் சுமார் 30 நிமிடங்கள் வரை தாமதித்தே அவரும், அவருடன் சென்ற போராளிகளும் தமது பிரதேசத்திற்கு தொடர்ந்து உட்செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

எமது பிரதேசத்திற்குள் செல்வதற்கு படையினரின் அனுமதி பெற வேண்டும் என்பது எமக்கு மிகுந்த ஆச்சரியத்தை தருவதாகவும், இவ்வாறு இராணுவம் நடந்து கொள்வதானது எமக்கும் - படையினருக்கும் இடையிலான சுமுகமான உறவைப் பாதிப்படைய வைக்கலாம் என எழிலன் கருத்துத் தெரிவித்தார்.

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த போதைப்பொருள் சிக்கியது!

ஒன்றரைக்கோடி ரூபா பெறுமதி வாய்ந்த ஒன்றரைக் கிலோ ஹெரோயின் போதைப்பொருளை ராமேஸ்வரம் ஊடாக இலங்கைக்குக் கடத்திச்செல்வதற்காக மதுரைக்கு எடுத்துவந்த இருவரை - மதுரை போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைதுசெய்தனர்.

அப்துல் பஷீர் மற்றும் முஸ்தபா ஆகிய இருவரும் கேரளாவிலிருந்து இந்தப் போதைப்பொருளை எடுத்துவந்தனர்.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே இவர்கள் இருவரையும் கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 22 பொலிஸாருக்கு பாதாள குழுவுடன் தொடர்பு

### ஆசிய மனித உரிமை அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 22 பொலிஸாருக்கு பாதாள உலகக் கும்பல்களுடன் நெருங்கிய உறவு இருப்பதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தகவல்கள் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களுள் ஒரு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இரண்டு பொலிஸ் உதவி அத்தியட்சகர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஐவர் அடங்குகின்றனர்.

ஆனால் இது தொடர்பான தகவல்கள் எவையும் தமக்கு வழங்கப்படவில்லை என பொலிஸ் மா அதிபர் சந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்களாதேஷுடனான முதல் போட்டியில்

# மயிரிழையில் தப்பியது இந்திய கிரிக்கெட் அணி!



(சிட்டகொங்)

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இந்திய அணி பெரும் போராட்டத்தின் பின்னர் 11 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பங்களாதேஷ் அணியின் கட்டன் ஹபிபுல்பஸார் நாணயச் சுழற்சியில் வென்று இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

பங்களாதேஷ் வீரர்களின் சிறப்பான பந்துவீச்சால் இந்திய அணியின் விக்கெட்டுக்கள் தொடக்கத்தில் சரிந்தன. 45 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுகள் சரிந்தன. தொடக்க வீரராக களம் இறங்கிய கங்கூலி ஓட்டம் எதுவும் எடுக்காமல் முதல் ஓவரின் 2 ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். அதைத்



தொடர்ந்து டெண்டுல்கர் 19 ஓட்டங்களிலும், யுவராஜ்சிங் 21 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

4 ஆவது விக்கெட்டான ராகுல ராவிட் - முகமது கைவ் ஜோடி பொறுப்புடன் ஆடி விக்கெட் சரிவைத தடுத்து நிறுத்தியது. இருவரும் நிதானத்துடன் ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.

கைவ் சிறப்பாக விளையாடி 50 ஓட்டங்களைத் தொட்டார். அவரைத் தொடர்ந்து ராவிட் அரைச்சதத்தை எடுத்தார். 40.1 ஆவது ஓவரில் ஸ்கோர் 173 ஆக இருந்தபோது ராவிட் - காலித் மகமூத் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 80 பந்துகளில் 5 பவுண்டரியுடன் 53 ஓட்டங்களை எடுத்தார். இந்த ஜோடி 128 ஓட்டங்



கள் எடுத்தது.

அதைத் தொடர்ந்து களம்வந்த தமிழக வீரர் ஸ்ரீராம் 3 ஓட்டங்களிலும், புதுமுக வீரர் டோனி ஓட்டமெதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனா.

கைவ் சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 80 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது அவர் ஆட்டமிழந்தார். 111 பந்துகளில் 7 பவுண்டரியுடன் இந்த ரன்னை அவர் எடுத்தார். அப்போது ஸ்கோர் 203 அக இருந்தது. கடைசி 2 ஓவர்களில் இர்பான் பதான் சிறப்



பாக விளையாடி ஓட்டங்கள் குவியக் காரணமாக இருந்தார்.


இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 245 ஓட்டங்கள் எடுத்தது. பதான் 11 பந்தில் ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 21 ஓட்டங்கள் (ஆட்டமிழக்காமல்) எடுத்தார்.

246 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றிபெறலாம் என்ற நிலையில் பங்களாதேஷ் துடுப்பெடுத்தாடியது. பங்களாதேஷ் 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 234 ஓட்டங்களை மட்டுமே எடுக்கமுடிந்ததால் 11 ஓட்டங்களால் தோல்வியுற்றது. ஆட்டநாயகன் விருதை அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர் முகமட் கைவ் பெற்றார்.



பங்களாதேஷ் அணியில் அதிக பட்சமாக ஹபிபுல்பஸார் 65 ஓட்டங்களும், காலித் மசூத் 50 ஓட்டங்களும் எடுத்தனர்.

# ஹர்பஜனுக்கு ஆதரவாக குரல்கொடுக்கிறார் முரளி



இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் பந்துவீசும் முறையில் தவறு ஏதுமில்லையென இலங்கை சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

'சாதாரணமாகப் பார்க்கும்போது எவ்விதத் தவறும் எனக்குத் தெரியவில்லை, பந்துவீசும் முறையில் பிரச்சினை ஏதும் இருக்காது என்றே நினைக்கிறேன்' என முரளிதரன் கூறியுள்ளதாக - சிட்னி 'மோர்னிங் ஹெரால்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஹர்பஜனின் தூஸ்ரா பந்து வீச்சுக் குறித்து ஆராய சர்வதேச கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது. இந்தமாதிரி சுழற்பந்து வீச்சாளர்கள் பந்துவீசும் முறை குறித்து அடிக்கடி ஆராயப்பட்டால், எதிர்காலத்தில் தூஸ்ரா பந்தைவீச இளம் பந்து வீச்சாளர்கள் முன்வரமாட்டார்கள்.

அந்த மாதிரி ஏதேனும் நிலை உருவானால் அது கிரிக்கெட்டுக்குத்தான் இழப்பு. தூஸ்ரா வகை பந்து ஆட்டத்துக்கு நல்லது என்றே நினைப்பதாகக் கூறினார். இந்த ஆண்டு மட்டும் இதுவரை 6 வீரர்கள் சர்வதேச கிரிக்கெட் சபையின் சந்தேகப் பார்வையில் சிக்கியிருக்கின்றனர். சர்வதேச கிரிகெட் சபையின் விதிப்படி - சுழற்பந்து வீச்சாளர்கள் தங்களது முழங்கையை 5 பாகை வரையிலும், மித வேகப் பந்து வீச்சார்கள் 7.5 பாகை வரையிலும், வேகப்பந்துவீச்சாளர்கள் 10 பாகை வரையிலும் சுழற்றலாம்.

## உதைபந்தாட்டப் போட்டியில்

# இனவாதக் கூச்சல் ஸ்பெயினுக்கு அபராதம்

உதைபந்தாட்டத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிரான ஸ்பெயின் ரசிகர்களின் இனவாதக் கேலிப் பேச்சுக்காக அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த மாதத்தில் இரு அணிகளுக்கும் இடையே நட்பு ரீதியிலான உதைபந்தாட்டம் நடைபெற்றது. இதில் இங்கிலாந்து அணியில் இடம்பெற்றுள்ள கறுப்பின வீரர்கள் ஷோன் ரைட், அஷ்லி கோல் ஆகியோரிடம் பந்து வரும்போதெல்லாம் ஸ்பெயின் ரசிகர்கள் கேலிக் கூச்சல் எழுப்பினர்.

ரசிகர்களின் இந்தச் செயலுக்காக சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் ஸ்பெயினுக்கு சுமார் 90 லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது. இதுபோல இனிவரும் ஆட்டங்களில் ரசிகர்களின் நடத்தை இருக்கக்கூடாது எனவும் ஸ்பெயின் உதைபந்தாட்ட சம்மேளனம் எச்சரிக்கப்பட்டுள்ளதாக, சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

## விளையாட்டு

# டெஸ்டில் வாய்ப்பில்லை யுவராஜ்சிங் வருத்தம்!




இந்திய டெஸ்ட் அணியில் தனக்கு வாய்ப்புக் கிடைக்காதது வருத்தமளிப்பதாக யுவராஜ்சிங் தெரிவித்தார்.

டெஸ்ட் போட்டியில் எனக்கு சரியான முறையில் வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. ஒரு போட்டியில் வாய்ப்புக் கொடுத்த பின்னர் அடுத்த போட்டியில் ஓரங்கட்டப்படுவது சரியான நடவடிக்கையாகத் தெரியவில்லை.

டெஸ்ட் போட்டியில் இருந்து நான் நீக்கப்பட்டது மிகப்பெரிய வருத்தம் அளித்தது. எனக்கு மீண்டும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டால் திறமையை நிருபிப்பேன் எனத் தெரிவித்தார் யுவராஜ்

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக உள்ளூரில் நடந்த டெஸ்ட் போட்டியில் தொடக்க வீரராக யுவராஜ் ஆடினார். சென்னை டெஸ்ட் போட்டியில் வாய்ப்புப் பெற்ற யுவராஜ் பின்னர் ஓரங்கட்டப்பட்டார். இதையடுத்து கம்பீர் அணிக்கு புதிய தொடக்க வீராகத் தேர்வுசெய்யப்பட்டார். இளம் வீரான அவர் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டதால் டெஸ்ட் போட்டியின் தற்போதைய தொடக்க வீரர் அந்தஸ்தை அவர் பெற்றிருக்கிறார்.

# மீண்டும் முதலிடத்தை கிளென் மக்ரா பிடித்தார்



டெஸ்ட் கிரிக்கெட் தர வரிசையில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார் அவுஸ்ரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மக்ரா.

இதுவரை முதலிடத்தில் இருந்த இங்கிலாந்தின் ஸ்டீவ் ஹார்மிசன் தற்போது நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். இந்தத் தரவரிசைப் பட்டியலை 'பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ்' நிறுவனம் வெளியிட்டுள்ளது.

காயம் காரணமாக இடையில் தடுமாறிய மக்ரா தற்போது வீறுகொண்டு எழுந்துள்ளார். பாகிஸ்தானுடனான டெஸ்டில் தனது கிரிக்கெட் வாழ்க்கையின் மிகச் சிறந்த பந்துவீச்சாக 24 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதுவரை டெஸ்ட் ஆட்டங்களில் 472 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார் மக்ரா. 500 விக்கெட்டுக்களை வீழ்த்தி வோன், முரளிதரன் வரிசையில் மக்ராவும் இடம்பெறவுள்ளார்.

இதேவேளை போர்ட் எலிசபெத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் 142 ஓட்டங்களைக்கொடுத்து ஒரு விக்கெட்டை மட்டுமே வீழ்த்தினார் ஹார்மிசன். இதைத் தொடர்ந்து இவர் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளார். தரவரிசைப் பட்டியலில் இரண்டாம் இடத்தை இலங்கையின் முரளிதரன் பிடித்துள்ளார். காயம் காரணமாக கடந்த 4 மாதங்களாக ஆடாதபோதும், இந்த இடத்தில் இருக்கிறார் முரளிதரன்.

உலகின் மிக வேகமான பந்து வீச்சாளரான சொகைப் அக்தர் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

# தென்னாபிரிக்க அணியில் மீண்டும் கிப்ஸுக்கு வாய்ப்பு



இங்கிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணியில் கிப்ஸ் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுடன் டெஸ்ட் போட்டியில் ஆடி வருகிறது. போர்ட் எலிசபெத் நகரில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இரு அணிகளும் மோதும் 2 ஆவது டெஸ்ட் போட்டி எதிர் வரும் 26 ஆம் திகதி டர்பன் நகரில் தொடங்கவுள்ளது.

அடுத்து நடைபெறவுள்ள எஞ்சிய 2 டெஸ்ட் போட்டிக்கான தென்னாபிரிக்க அணியில் மூத்தவீரர் கிப்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார். சமீபத்தில் தென்னாபிரிக்க அணி இந்தியா சென்றபோது சூதாட்ட விசாரணைக்குப் பயந்து கிப்ஸ் அணியில் இருந்து விலகினார்.

மேலும் சமீபகாலமாக அவரின் துடுப்பாட்டம் மோசமாக இருந்த காரணத்தால் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் கிப்ஸ் வாய்ப்புப் பெறவில்லை.

முதல் டெஸ்ட் தோல்வியை அடுத்து அணியின் துடுப்பாட்டப் பலத்தை அதிகப்படுத்தும் நோக்கில் கிப்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும் போயேவும் அணிக்குத் திரும்பியுள்ளார். தோள்பட்டை வலி காரணமாக முதல் டெஸ்டில் கலிஸ் பந்துவீசவில்லை. நடக்கவிருக்கும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் அவர் பந்துவீசுவதை உறுதி செய்துள்ளார். எனவே, எஞ்சிய 2 டெஸ்ட் போட்டிகளிலும் தென்னாபிரிக்கா புதுத்தெம்புடன் களமிறங்குமென நம்பப்படுகிறது.

தென்னாபிரிக்க அணி வீரர்கள் வருமாறு :

ஸ்மித் (கப்டன்), கிப்ஸ், ருடொல்ப், கலிஸ், டிப்பெனார், [illegible] வெல்ட், ஸ்டென், என்ரினி, போயே, வில்லியர்ஸ், ஹோல்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



அவுஸ்ரேலியாவுடனான முதலாவது டெஸ்டில் பாகிஸ்தான் தோற்றதையடுத்து, பாகிஸ்தான் வீரர்களின் கொடும்பாவிகளை கராச்சியில் கிரிக்கெட் ரசிகர்கள் தீயிட்டு எரிப்பதைக் காணலாம்.

# குடத்தனை - புனித நகரில் 144 குடும்பங்களுக்கு வீடுகள்!

## விரைவில் கையளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

குடத்தனை - புனித நகர் பகுதிகளில் 144 குடும்பங்களுக்கு இரண்டு பரப்புக் காணிகளுடன் வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இவை கையளிக்கும் நிகழ்வு விரைவில் நடைபெறவுள்ளதாகவும் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

வருட இறுதிக்குள் இரண்டு மில்லியன் ரூபா நிதி தருவதாக புனர்வாழ்வு அமைச்சு எமக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளது. எமது மாவட்டத்தில் தற்போது 2,600 குடும்பங்கள் முழுமையாக வீடுகளின்றி உள்ளன. 1,800 குடும்பங்கள் அரை நிரந்தர வீடுகளில் வாழ்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் ஏ, பி பாதைகளைப் புனரமைப்பதற்கு தெற்கிலிருந்து கருங்கற்களையே கொண்டு வர வேண்டும்.

கைதடி, நாவற்குழி, வல்லை, தொண்டமானாறு, வண்ணாத்திப் பாலம், புத்தூர், மானிப்பாய் ஆகிய பாலங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மககளுக்கு உடன் நிவாரணம் வழங்க ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் வெள்ள அபாயத்தைக் கட்டுப்படுத்த இந்த நிதி பயன்படவுள்ளது.

இந்த வருடத்துக்குள் பெரும்பாலான மக்களின் மீள் குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

எமது தொல்பொருட்களைப் பாதுகாக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. யூ.என்.எச்.சி.ஆர் எமக்கு 166 மில்லியன் ரூபா வழங்கியுள்ளது.

இதன்மூலம் பல திட்டங்களை சிறப்பாக மேற்கொள்ளவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.அரச அதிபராக கணேஸ் பொறுப்பேற்பார்

## செயலக மாநாட்டில் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் பதவியிலிருந்து எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் இடமாற்றம் பெற்று செல்லவுள்ளதாக செ.பத்மநாதன் பத்திரிகையாளர் மத்தியில் உத்தியோகபூர்வமாக நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அவர் உலகவங்கியின் உதவியுடன் நடைபெறுகின்ற வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டப் பணிப்பாளராக கடந்த 2 ஆம் திகதி முதல் பொது நிர்வாக அமைச்சின் அனுமதியுடன் பொறுப்பேற்றதன் காரணமாக தாம் அரசாங்க அதிபர் பதவியிலிருந்து மாற்றம் பெறுவதாகத் தெரிவித்தார்.

தற்போது வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இருக்கும் கணேஸ் யாழ்.மாவட்ட அரச அதிபராகப் பொறுப்பேற்கவுள்ளார். தற்போது பொறுப்பேற்றிருக்கும் பதவியால் யாழ்.மாவட்ட மக்களுடன் தொடர்பு தொடர்ந்து பேணப்படும் என யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

# பல்கலையில் சிறப்பாக நடைபெற்ற "சங்கநாதம்" நூல் அறிமுக விழா!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் "சங்கநாதம்" நூல் அறிமுக விழா நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணனும் கலந்துகொண்டனர். துணைவேந்தர் மோகனதாஸ் நூலை வெளியிட்டுவைக்க, நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

நூலின் வெளியீட்டு உரையை பேராசிரியர் சி.பரமேஸ்வரனும், விமர்சன உரையை பேராசிரியர் அ.சண்முகதாஸும் நிகழ்த்தினர். இந்த நூல் வெளியீட்டு விழாவில் ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், தமிழீழ மாணவர் அமைப்பு உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள் எனப் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

# வெளிக்கள நிலையம் நடத்திய விஞ்ஞானப் போட்டி முடிவுகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விஞ்ஞான தினம்- தொண்டமானாறு வெளிக்கள நிலைய ஏற்பாட்டில் யாழ். கல்விவலய ஸ்தான சி.சி வித்தியாலயத்தில் கல்வித் துறைப் பேராசிரியர் க.சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டரீதியில் மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்குடன் வினாடி வினாப் போட்டியும், கட்டுரைப் போட்டியும் நடத்தப்பட்டு கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் தரம் 06-08 வரை கீழ்ப் பிரிவாகவும், 09-11 வரை இடைநிலைப்பிரிவாகவும் - வினாடி வினாப் போட்டி பிரிவுக்கு 10 மாணவர்கள் வீதம் தெரிவுசெய்யப்பட்டு இறுதிச் சுற்றுப்போட்டி இடம்பெற்றது.

கூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள், சான்றிதழ்கள் வழங்கி யாழ். கல்விப் பணிப்பாளர் கௌரவித்தார்.

### கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - பா.துஸ்யந்தன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), இரண்டாம் இடம் - நா.பவீந்திரன் (விக்னேஸ்வரா கல்லூரி), மூன்றாமிடம் - ஏ.நிதர்சன் (விக்னேஸ்வராக் கல்லூரி).

### இடைநிலைப்பிரிவு

முதலாம் இடம் - ஜே.இலாஞ்சமின் மிருணாளினி (வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்- ரி.அஜந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் - சி.கோபிராஜ் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

### 12,13 ஆம் தரங்களுக்கான கட்டுரைப்போட்டி

முதலாம் இடம் - ஜே.பிரவீந்திரா (சென். பற்றிக்ஸ் கல்லூரி), இரண்டாம் இடம் - சி.சுகிர்தா (வேம்படி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - கே.நிஷாந்தி (யாழ்ப்பாணக் கல்லூரி)

## கவிஞர் இராஜமனோகரனின் நூல்கள் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் கந்தையா இராஜமனோகரனின் 'தமிழிசைப் பாடல்கள்', 'நாற்று', வானொலிக் கவிதைகள் ஆகிய நூல்களின் அறிமுகவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும், மதிப்பீட்டுரைகளை இ.குமரன், எஸ்.மகேந்திரன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# பயணிகளை ஏற்றிச் செல்லும் சிறிய வாகனங்களுக்கு தடை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 40 ஆசனங்களுக்கு குறைவான ஆசனங்களைக் கொண்ட பயணிகள் ஏற்றும் வாகனங்களுக்குத் தற்காலிக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளபோதும், இந்த அனுமதி 2005 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நீக்கப்படலாம் என யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்துக்கு அமைய பயணிகளை ஏற்றும் வாகனம் குறைந்தது 40 ஆசனங்களைக் கொண்டிருக்கவேண்டும். அவற்றுக்குத்தான் அனுமதிப்பத்திரம் வழங்க முடியும்.

ஆனால், யாழ்.மாவட்டத்தில் தற்போது போக்குவரத்தில் உள்ள சிரமங்கள் காரணமாக 40 ஆசனங்களுக்கு குறைவான வாகனங்களுக்கும் பயணிகளை ஏற்ற தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், 2005 ஆம் ஆண்டு ஏ-9 வீதி உட்பட அனைத்து வீதிகளும் புனரமைக்கப்படுவதற்கு அமைய 2005 ஜூன் மாத காலப்பகுதியில் தற்காலிக அனுமதிப்பத்திரத்துக்கு தடை விதிக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 40 ஆசனங்களுக்குக் குறைவான ஆசனங்களைக்கொண்ட வாகனங்கள் பயணிகளை ஏற்றமுடியாது. இதன்மூலம் விபத்துக்களைத் தடுக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வருமான மேற்பார்வையாளர்கள் மாதாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர்களுக்கான மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வலி. தென்மேற்குப் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து வருமான மேற்பார்வையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு த.நிர்மலானந்தன் தெரிவித்தார். (29)

## யாழ். திறந்த பல்கலைக்கழகம்

# கணினி கற்பிப்போருக்கு விண்ணப்பம் கோரியுள்ளது!

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் கணினி கற்கைநெறியைக் கற்பிப்பதற்கு ஒப்பந்த அடிப்படையிலான விண்ணப்பங்கள், இலங்கை திறந்த பல்கலைகழக யாழ். பிராந்திய நிலையத்தால் கோரப்பட்டுள்ளன.

பட்டப்படிப்பில் கணினியை ஒரு பாடமாகக் கற்று பி.எஸ்.சி பட்டம் பெற்றவர்கள் அல்லது பி.எஸ்.சி எந்திரவியல் பட்டம் பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை இயக்குநர், இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையம், பிரவுண் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு, இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரா கேட்டுள்ளார்.

# வசதிகளற்ற நிலையில் வரணி மகா வித்தியாலயம்

(தென்மராட்சி)

தென்மராட்சி வரணி மகா வித்தியாலயத்தில் இடப்பற்றாக்குறை, கட்டட வசதியின்மை, தளபாடப் பற்றாக்குறை போன்றவற்றை நிவர்த்தி செய்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாடசாலை அபிவிருத்திச்சபை சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் பின்தங்கிய கிராமங்களிலிருந்து வரும் 800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் நலன்கருதி உடனடியாக இந்த வேலைத்திட்டங்களைச் செய்துதருமாறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

## வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு இந்த வருடத்துக்கான வீதி பராமரிப்பு நிதியும், வீதி மீள் புனரமைப்பு நிதியும் கிடைத்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் 'ஏ' தரத்திலுள்ள குடாநாட்டு வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை வீதியில் மருதனார்மடத்திலிருந்து தெல்லிப்பளை வரையான பகுதியும் - பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, காரைநகர் வீதி என்பனவும் திருத்தம் செய்யப்படவுள்ளன. (101)

## வாராந்த ஆன்மீக நிகழ்வு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பெரியாழ்வார் ஆசிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் இடம்பெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுகளில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தினரின் பண்ணிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் ஜெயகௌரி செல்வமோகன், ஜெயபாரதி கௌசிகன் ஆகியோரின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (20)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்



பெயர் : த.சரண்ராஜ்
முகவரி : மல்லாகம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


# குருநகரில் எரிக்கப்பட்ட வீடுகள் புனரமைப்பு!

அண்மையில் இடம்பெற்ற மோதல்களின்போது குருநகர், திருநகர் பகுதிகளில் தீக்கிரையாக்கப்பட்ட வீடுகள் கியூடெக் நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

தீக்கிரையாக்கப்பட்ட 19 வீடுகளையும் புதிதாக நிர்மாணித்து ஐந்து வீடுகள் கடந்த வாரம் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன. ஏனைய வீடுகளின் நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸ் - கரித்தாஸ் நிறுவன நிதியுதவியுடன், கியூடெக் நிறுவனத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் நிர்மாணித்து வழங்கும் செயற்பாடு இடம்பெறுவதாக கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு ஜெயக்குமார் தெரிவித்தார். (91)

## திருவாசக முற்றோதல்

(நெல்லியடி)

அல்வாய்- சாமணந்தறை அருள்மிகு ஆலடிப் பிள்ளையார் திருக்கோயில் திருத்தொண்டர் சபை வருடந்தோறும் மார்கழி மாதம் நிகழ்த்திவரும் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

## திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 6 மணிக்கு நடைபெறவுள்ள திருவாசக விழாவில் 'சித்தம் அழகியார்' எனும் விடயம் தொடர்பாக புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் எஸ்.லலீசனின் சிறப்புச் சொற்பொழிவும், சிவத்திரு வி.செவ்வந்திநாதக் குருக்களின் திருவாசகப் பண்ணிசையும் இடம்பெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறந்த குழந்தையும் நோய்களும்





## சிநேகிதியே

(சென்றவாரத் தொடர்ச்சி...)

மேலும் அடுத்தவர்களின் வேடிக்கைக்கு ஏற்ப உணர்வுகளை வெளிப்படுத்தாது. குழந்தை வளர்ந்து, நடைபயிலும்போது பொருட்களின் மீது முட்டி மோத நேரிடும். குழந்தைக்கு ஒரு கண்ணில் மட்டும் பிரச்சினை இருந்தால், அதைக் கண்டு பிடிப்பது சற்றுச் சிரமம்தான். ஆனாலும் சில அறிகுறிகள் மூலம் கண் பார்வைக் குறைபாட்டை எளிதாகக் கண்டுபிடிக்க முடியும். குறைபாடுள்ள கண்ணால் இயல்பான இன்னொரு கண்ணின் அசைவுக்கு ஏற்ற வகையில் இயங்கமுடியாது. இதனால் குழந்தை ஒரு கண்ணால் சாய்வாகப் பார்க்க ஆரம்பிக்கும். இங்குதான் மறு கண்ணின் பிரச்சினை உண்டாகிறது. குறைபாடுள்ள கண் படபடவெனக் கண்டபடி துடித்துக் கொண்டே இருக்கும்.

சில நேரங்களில் கார்னியாவில் அல்லது கண்மணியில் வெள்ளை நிறம் தெரிந்தால் அது குறைபாடுள்ள கண் என்று தெரிந்து கொள்ளலாம். சிலவேளைகளில் கிளாக்கோமா எனப்படும் கண்ணீர் அழுத்த நோயால் பாதிக்கப் பட்டு இருந்தால், கண்களில் நீர் தேங்கி நிற்கும்.



இதன் காரணமாகக் குறிப்பிட்ட கண் மூலம் ஒரு உருவத்தைத் தெளிவாகப் பார்க்க முடியாது. மங்கலாகவே தெரியும். கடைசியாகக் கண் பார்வையில் பாதிப்பு இருக்கிறது என்பதை மருத்துவப் பரிசோதனை அல்லது கண் பரிசோதனை மூலம் கண்டு பிடிக்கலாம்.

### கண்பார்வை குறைபாட்டுக் கான காரணங்கள் -

ஒரு குழந்தைக்கு கண்பார்வைக் குறைபாடு வருவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் பார்த்தால்.

- ஒளிவிலகல் குறைபாடு.
- கற்றாக்ட்.
- கிளாக்கோமா.
- மாறுகண்.
- கண்ணில் காயம் ஏற்படுதல் (குழந்தைகளின் கண்களில் ஏற்பட்ட காயங்கள் பற்றிப் பெற்றோரிடம் சொல்லாமல் விட்டு விடுவதால், காலப்போக்கில் பாதிப்புப் பெரிதாகும்)

### கார்னியாவில் நோய்கள்

- ரெட்டினா மற்றும் பார்வை நரம்பில் பாதிப்பு.
- பரம்பரைக் குறைபாடுகள்.
- கட்டிகள் மற்றும் கண்பார்வையைப் பாதிக்கும் வேறு காரணங்கள்.

### பார்வையில் குறையிருந்தால் என்ன செய்ய வேண்டும்?

குழந்தைகளுக்கு ஏற்படும் பார்வைக் குறைபாட்டுப் பிரச்சினைகளில் சிலவற்றை எளிதாகக் குணப்படுத்திவிடலாம். ஆனால் சில பிரச்சினைகள் ஆபத்து மிகுந்ததாகவும், உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய அபாய நிலையிலும் காணப்படும். ஆகையால் உங்கள் குழந்தைக்குப் பார்வைக் குறைபாடு இருக்கிறது என்று நீங்கள் சந்தேகித்த அடுத்த விநாடியே, ஒரு கண் மருத்துவ நிபுணரிடம் உங்கள் குழந்தையைக் கொண்டுபோய்க் காட்டுங்கள். உண்மையிலேயே குறைபாடு இருக்குமானால் அவர் கண்டுபிடித்துத் தகுந்த சிகிச்சை செய்வார். கண்ணைப் பொறுத்தவரை எவ்வளவு விரைவில் சிகிச்சை அளிக்கமுடியுமோ அவ்வளவு விரைவாகச் சிகிச்சை செய்வதால் கண் பார்வையையும், குழந்தையின் உயிரையும் பாதுகாக்க முடியும். தாமதமான சிகிச்சையால் கண்பார்வை பறி போகும் ஆபத்துள்ளது என்பதை பெற்றோர்கள் உணர வேண்டியது மிகவும் அவசியம்.

(முற்றும்)



# பிறப்பிலேயே ஏற்படக் கூடிய நரம்புகளின் பாதிப்புகள்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

பிரசவத்துக்குப்பின் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய நரம்புகளின் பாதிப்புகள் காரணமாக வெவ்வேறு நோய்களால், பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவையாவன -

*ரிக்கட்ஸ் நோய்:-*

இந்த நோய் கல்சியக் குறைபாடு காரணத்தால் ஏற்படுகிறது.

*விற்றமின்களின் குறைபாடு:-*

முக்கியமாக விற்றமின் சீ குறைபாட்டால் பாதிக்கப்படலாம்.

*உடலின் ஒரு உறுப்பு பலவீனமாதல்:-*

வலது கையால் எழுதுபவர்களின் மூளையின் இடதுபக்கம் பலமானது. அதேபோல் அவ்வாறானவர்களின் வலதுகை, இடது கையைவிட அளவில் அதிகமாகும். இடது கையால் எழுதுபவரின் மூளையில் வலப்பக்கம் பலம்கூடியதாகக் காணப்படும். அவர்களின் இடதுகை வலது கையைவிடப் பெரிதாகக் காணப்படும். ஆனால் சிலபேரின் வலதுகை, இடதுகை இரண்டும் பலவீனமாகும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இவ்வாறு தோன்றுவதற்கான காரணமாக அந்தப் பலவீனமான கைக்கு எதிர்ப்பக்கத்தின் மூளையிலுள்ள சில பாதிப்புக்கள் ஆகும். (மூளையில் கட்டி, புற்றுநோய் மற்றும் நரம்புகளின் பலவீனங்கள் இதற்றுக் காரணமாகும்.)

இவ்வாறு வலது அல்லது இடது கைகள் பலம் இல்லாமல்விட்டால், அதற்கு என்ன காரணம் என்பதை அறிவதற்கு EEG பரிசோதனை ஒன்றைச் செய்யவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் CT ஸ்கான் செய்யவேண்டியநிலை ஏற்படும்.

பிறந்த குழந்தை பிறந்தபோதோ அல்லது அதன்பின்னரோ குழந்தை அங்கவீனமாக இருப்பதாகத் தெரிந்தால், அதற்குத் தாமதமின்றி வைத்தியரை நாடி ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளவேண்டும். அதேபோல் வைத்தியர்களின் ஆலோசனைகளின்படி, உடற்பயிற்சிகளிலும் ஈடுபடுத்தவேண்டிய நிலை ஏற்படும்.

*பெல்ஸ் பொல்சி:-*

சிறு குழந்தைகளுக்குக் காணப்படுகின்ற ஒரு அங்கவீனமான நிலையாகப் பெல்ஸ் பொல்சி என்ற அங்கவீன நிலையைக் குறிப்பிடலாம். இதன்போது காணப்படும் அறிகுறிகள் -

☆ குழந்தையின் முகம் ஒரே பக்கமாகத் திரும்பியிருத்தல்.

☆ வாய் ஒரு பக்கமாகத் திரும்புதல்.

☆ இரு காதுகளின் பின்புறங்களில் வேதனையாக இருத்தல்.

☆ இந்த நோய் பெல்ஸ் என்ற விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் அந்த நோய் நிலைக்கு பெல்ஸ் பொல்சி எனப் பெயரிட்டனர். இதன்போது நோயாளியின் 7 ஆவது நரம்பு பாதிக்கப்படுகிறது.

☆ இந்த நோய் மிகவும் கிட்டிய உறவினர்களைத் திருமணம் செய்யும்போது அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு ஏற்பட இடமுண்டு. இது பிறப்பில் அல்லது பிற்காலத்திலும் ஏற்படலாம். அதைவிட இந்த நோய் பரவுவதற்கு இன்னும் பல காரணங்கள் உள்ளன.

☆ அங்கவீனம்.

மூளையில் கட்டி ஏற்படுதல் போன்ற காரணங்களால் - கை, கால் பலம் இல்லாமல் போதல் போன்ற அறிகுறிகளும் காணப்படுகின்றன. அதைவிடச் சத்திரசிகிச்சைகளுக்குப் பின்பு சிலசமயங்களில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட இடமுண்டு.

*கால்கள் அங்கவீனமாதல்:-*

சில குழந்தைகளுக்குப் பிறப்பிலேயே கால்கள் குறைபாடுகளுடன் இருக்கின்றன. சிலபேருக்கு கை, கால்கள் ஆகிய இரண்டும் சீரின்மையாக இருப்பதற்கும் கல்சியக் குறைபாடு காரணமாகும். இந்தக் குறைபாடு வயதாகும்போது ஏற்படும்.

உலகில் பிரச்சினையாகவுள்ள பிரதான நோயாக அங்கவீனத்தைக் குறிப்பிடலாம். வைத்திய சாலைக் கட்டில்களின் 10 வீதமானோர் அங்கவீனத்தால் பாதிக்கப்பட்டவராக இருப்பதைக் காணலாம். இதனால் குடும்பங்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம். இது முழுக் குடும்பத்தின் பொருளாதாரத்தைக் குறைத்துவிடும். இதனால் ஒருவர் பிறப்பிலேயே நோயாளராக மாறுமுன் மற்றும் பிற் காலத் தில் நோயாளராக ஆவதற்கு முன் கீழ்க் குறிப்பிடும் காரணங்கள் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும்.

☆ கர்ப்பிணித் தாய்மார்கள் ஒழுங்காக கிளினிக் போவது மிகவும் முக்கியமாகும்.

☆ பிறந்த குழந்தையில் சில உறுப்புகளில் அங்கவீனம் காணப்பட்டால், உடனடியாக வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். வயதுபோன காலத்தில் இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் போன்ற நோய்கள் இருந்தால், தகுந்த சிகிச்சைகளைப் பெற்று, நோய் [illegible]ந்தவாறு தடுத்துக்கொள்ளவேண்டும். அப்போது அநேகமாக, அவசரமாக முகங்கொடுக்கும் அங்கவீனம் போன்ற நோய்கள் ஏற்படலாம், பாதுகாத்துக் கொள்ளலாம். (முற்றும்)

# மிகச்சிறந்த நோய்த்தடுப்பு மருந்து



உலகிலேயே மிகச்சிறந்த நோய்த்தடுப்பு மருந்து எது தெரியுமா? சரியான முறையான சாப்பாடுதான். உணவு விடயத்தில் கவனக் குறைவாக இருப்பதால்தான் பல நோய்கள் வருகின்றன. அதனால் எதை, எப்போது, எப்படி, எவ்வளவு சாப்பிட வேண்டும் என்பதை அறிந்துகொள்வது அவசியம்.

உணவுப் பழக்கம் ஒவ்வொரு தேசத்துக்கும், தேசத்தின் ஒவ்வொரு மூலைக்கும்கூட வித்தியாசப்படும். ஏன்... ஒரே வீட்டிலேயே ஒருவருக்குப் பிடித்த உணவு இன்னொருவருக்குப் பிடிக்காமல் போகிறதே! ஆகவே மிகவும் முக்கியமாகப் பார்க்க வேண்டியது நம் உடலுக்கும், மனதுக்கும் பொருந்தக்கூடிய, நிறைவு தரக்கூடிய உணவு எதுவாகும் என்பதைத்தான்.

ஆயுர் வேத த்தின் தத்துவப்படி, நமது உடலுக்குள் உட்செல்லும் எந்தவொரு பொருளும் மூன்று விதமான விளைவுகளைத் தருகிறது. அந்தப் பொருள் உணவாக இருந்தால், உடல் ஊட்டம் பெறுகிறது. அது மருந்தாக இருந்தால், நோயிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது. அது விஷமாக இருந்தால், உடல்நிலை சீர் கெடுகிறது. நமது விருப்பமும் ,உடல் ஏற்றுக் கொள்ளும் பக்குவமும்தான் பொருட்களை உணவாகவோ, மருந்தாகவோ விஷமாகவோ நினைக்கவைக்கிறது. உதாரணமாகக் கத்தரிக்காய்.

பலர் இதை அமுதம் மாதிரி நினைத்துச் சாப்பிடுகிறார்கள். சிலர் அதைச் சாப்பிட்டாலே சொறிய வேண்டும்போல் இருக்கும் என்று அலறுகிறார்கள். இவ்வாறாக நாம் உண்ணும் உணவுகளின் தன்மை நினைவுக்கு ஏற்றபடி மாறுபடுகின்றது.

எமக்கு விருப்பமான உணவுகளை உண்ணுவது உடலுக்கு ஏற்றதல்ல. அவை சுவைக்கேற்றதேயாகும். அவ்வாறான சுவைக்கு அடிமையாகாமல் உடலுக்குச் சத்து மிகுந்த உணவுகளை நாம் உண்ணவேண்டும். விருப்பமான உணவைக் கூடுதலாகவும், விருப்பமில்லாத உணவைக் குறைத்தும் உண்ணுவது [illegible] விக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு முகத்தின் தேடல்

மனோன்மணி சண்முகதாஸ்





ஆலமரமும், அரசமரமும் சடைச்சு வளர்ந்திருக்குது. கீழை ஒரு மேடை. அந்த மேடையிலே படுத்தால் நல்ல தூக்கம் வரும். முச்சந்தியில் ஒரு நல்ல மேடை. அதுதான் எங்கடை விளையாட்டு மேடை. அருகே ஒரு சின்னக் கோயில் அடிக்கடி பொங்கலும், பூசையும் நடக்கும். எங்களுக்குப் பொங்கல் நடந்தால் நல்ல சந்தோஷம். வயிற்றுக்கு உணவு கிடைக்கும். பொங்கல் பரிமாறப்படும்போது நான் சிலவேளை கள்ளப் பந்தியும் வாங்குவேன். அது பிழையெண்டு எனக்கு நல்லாத் தெரியும். ஆனால் என்ன செய்யிறது? அவை தாற பொங்கல் எனக்குக் காணாது. பொங்கல் தாறவையும் எனக்குக் கொஞ்சமாகத்தான் தருவினம். அங்கை வாற பெரிய அண்ணைமாருக்கு மட்டும் நிறையக் குடுப்பினர். அந்த அண்ணைமார் பெரிய படிப்புப் படிக்கினம். மோட்டார் சைக்கிளிலை ஓடித் திரிவினம். தெருவாலை போறவைக்கு நக்கல் அடிப்பினம். அவையளைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. இப்ப திருவெம்பாவைப் பூசை நடக்குது. அது விடியற் காலமை 5 மணிக்கு நடப்பதால் அண்ணைமார் வாறதில்லை. அதாலை எனக்கு கடலை, அவல் நிறையக் கிடைக்குது. நேற்று நடந்த சம்பவம் என்னைக் கொஞ்சம் பயப்பிடுத்துப் போட்டுது...!

நான் கோயில் மணிச் சத்தம் கேட்டுக் கண்ணை முழிச்சன். எல்லாரும் நல்ல நித்திரை.. எழும்பி அம்மாவைத் தேடினன். அவவைக் காணேவில்லை. அம்மா!... அம்மா...! எண்டு கூப்பிட்டுப் பார்த்தன். நான் கூப்பிட்ட சத்தத்திலை சின்னத் தங்கச்சியும் எழும்பி விட்டாள். அவளுக்கு இன்னும் ஒரு வயதாகவில்லை. நடக்கத் தொடங் கவில்லை. ஆனால் நல்லாத் தவண்டு திரிவாள். அவளுக்குப் போடச் சட்டையில்லை. நல்ல குளிரெண்டால் அம்மாவின்ரை சீலையாலை போர்த்திவிடுவம். இப்ப என்ரை காலைப்பிடித்துக் கொண்டு எழும்பி நிக்கிறாள். நான் அவளைத் தூக்கி, இடுப்பிலை வைச்சுக்கொண்டு அம்மாவைத் தேடினன். வெளியே செருப்புச் சத்தம் கேட்டது. வெளியே வந்து எட்டிப் பார்த்தன். யாரோ ஒரு உருவம் போய்க் கொண்டிருந்தது... கொஞ்ச நேரத்திலை அம்மா வந்தா. தங்கச்சியை என்னிடமிருந்து வாங்கினா. பாயிலை படுத்துக் கொண்டு தங்கச்சிக்குப் பால் குடுக்கத்தொடங்கிவிட்டா. நான் கிட்டப் போய்ப் பார்த்தேன். அவள் கண்ணை மூடி நித்திரையாய் விட்டாள். பாவம்... நான் அவாவை எழுப்ப விரும்பவில்லை. பக்கத்திலை தம்பிமார் இருவரும் சுருண்டு படுத்துக் கிடந்தார்கள். அம்மா வந்தது எனக்கு நிம்மதி! ஆனால் என்ரை மனத்திலை ஒரு மூலையில் கொஞ்சம் பயம் ஒட்டிக் கொண்டது.

கோயில்ல... திருவெம்பாவைப் பாட்டுக் கேட்டது. நான் பல்லைத்தீட்டி முகத்தைக் கழுவினேன். இன்றைக்கு அம்மாவிடம் கேட்க வேணும் என்று மனத்துள் திட்டம் போட்டேன். என்னுடைய கால்கள் கோயிலை நோக்கி நடக்கத் தொடங்க... காலுக்குள் சின்னத் தங்கச்சி இவளை இப்ப என்ன செய்யிறது. அம்மாவை எட்டிப் பார்த்தன். அவா அசந்து தூங்கிவிட்டா. கோயில்ல கடைசிப் பாட்டுக் கேட்டது. இப்ப போனால் தான் பிரசாதம் கிடைக்கும். வீட்டிலையிருந்து நடந்து போக 5 நிமிடம் வேணும்... நான் சின்னத் தங்கச்சியையும் இடுப்பிலை தூக்கிக் கொண்டு கோயிலை நோக்கி நடந்தன்.!!

அங்கை கோயிலுக்கு நிறையச் சனம் நிண்டுது. இண்டைக்குப் பிரசாதம் கிடையாது போலை கிடக்கு. நான் உள்ளே போகலாம் எண்டால், நிறையப் பெரிய ஆக்கள்! விபூதி, சந்தனம் வேண்டிப் போட்டன். பூவும் கிடைச்சுது. சின் னத் தங்கச்சிக்கும் பூசிப் பெரிய பொட்டாய் வைச்சுவிட்டன். சட்டையில்லாமல் வெறும் மேனியோடை அவள் தெய்வக் குழந்தைபோல இருந்தாள்! தலையிலை நிறையச் சுருட்டைமயிர்... பவளம் போல் நிறம்! நான் அவளை இடுப்பில் இருந்து கீழேவிட முடியாது. இடுப்பிலை இறுக்கி வைச்சுக் கொண்டு நிண்டன். பிரசாதம் கொடுக்கத் தொடங்க, நான் முன்னுக்குப் போக முயற்சி செய்தன். சனம் விடயில்லை. பேசாமல் வெளி மேடையிலை வந்து நிண்டன். நல்ல பனி! சின்னத்தங்கச்சி... என்னைக் கட்டிப்பிடிச்சுது. பாவம் சட்டை போடாமல் அதுக்கு நல்லாக் குளிருது. எனக்குப் பிரசாதம் வாங்கவேணும் எண்ட நினைப்புத்தான். திரும்பவும் உள்ளை போக நினைச்சு உள்ளை போகப் பிரசாதம் எல்லாம் குடுத்துமுடிஞ்சுது...!

பெரியாக்கள் எல்லாரும் வாங்கிக் கொண்டு வெளியே வருகினம். கொஞ்சம் பொடியளும் வேண்டிப் போட்டினம்! எனக்கு அழுகை வரப் பார்த்தது. அதை அடக்கிப்போட்டுப் பேசாமல் மேடையிலை குந்தி இருந்தன். ஐயரும் வெளியே வந்தார். அவற்றை கையிலை ஏதாவது இருக்கும் எண்டு பார்த்தன். ஒண்டு மில்லை...! என்ன பிள்ளை பிரசாதம் வேண் டிப்போட்டியே! அவர் கேட்டுப்போட்டு சைக்கிள்ள ஏறிப் போட்டார். எனக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது.

இப்ப நல்லா விடிஞ்சு போட்டுது. சின்னத் தங்கச்சியும் நித்திரையாய்ப் போச்சுது. நான் எழுந்து நடக்கத் தொடங்கினன். பின்னாலை ஒரு குரல் கேட்டது. நான் திரும்பினேன்.ஒரு அண்ணா தான் கூப்பிட்டான். இந்தா பிரசாதம் அவன் கையில் வாழையிலை நிறையப் பொங்கல் ! ஆவி பறந்து கொண்டிருந்தது. நான் தயங்கினேன். அவன் சொன்னான் இண்டைக்கு எங்கடை பூசைதான்! நீ ஒவ்வொரு நாளும் கோயிலுக்கு வந்து போறதை நான் கண்டிருக்கிறன்! இண்டைக்கு நீ பிந்தி வந்ததையும் கண்டன்! பிரசாதம் உனக்குக் கிடைக்கல்ல! இந்தா பிடி! நான் பேசாமல் நிண்டன். தங்கச்சி! எனக்கும் ஒரு தங்கச்சி உன்னைப்போல இருந்தாள். அவள் போன வருஷந்தான் காரிலை அடிபட்டுச் செத்துப் போனாள்... அவன் குரல் தழுதழுக்க கண் களில் நீர் முட்டிவந்தது. அவளுடைய நினைவு நாளுக்குத் தான் பூசை செய்வித்தேன். எனக்கு வேறையாரும் இல்லை. உன்னைப் பாக்க என்ரை தங்கச்சி போலவே தெரியுது...!

எனக்கு அந்த அண்ணாவைப் பாக்கப் பாவமாய் இருந்தது. எண்டாலும் கொஞ்சம் பயமாக இருந்தது. அண்டைக்கு அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது குஞ்சு! ஆரும் நீ தனிய நிக்கைக ஏதும் தந்தால் வேண்டாதை! நான் அண்ணாவை நிமிர்ந்து பார்த்தேன். அவன் கண்களில் நீர் வடிந்து கொண்டிருந்தது. எனக்கு அம்மா சொன்னது பிழை என்று நினைக்கத் தோன்றியது. ஆனால் இப்ப நான் தனிய நிக்கிறன். இந்த அண்ணாவை எப்படி நம்புவது? என்ரை மனதுக்கை கிடந்தது அவனுக்குத் தெரிஞ்சு போச்சு! பிள்ளை நீ என்னிலை சந்தேகப்படுகிறாய் போலக் கிடக்கு. ஆனால் நான் என்ன செய்ய முடியும் அவன் குரல் உடைஞ்சு போச்சுது! பொங்கலை மேடையில் வைச்சுப் போட்டு அவன் நடக்கத் தொடங்கினான். நான் அவனுடைய கால்களைப் பார்த்தன். இரண்டு காலுக்கும் பொய்க்கால்கள் .... திரும்பிப் பொங்கலைப் பார்த்தன். பக்கத்திலை ஒரு பேப்பரிலை வந்த படம்! படத்திலை ஒரு பிள்ளை சரியா என்னைப் போலவே! எனக்கு சீ அண்ணா! இவன் சொன்னது உண்மை ... நான்! அவனைக் கூப்பிட்டேன் பெரியண்ணா! அவன் திரும்பாமல் போய்க் கொண்டிருந்தான்.

# சந்தேகம் வந்துவிட்டால் சந்தோஷப் பூ உதிரும்



இரு மனங்கள் இணைவதுதான் திருமணம். அந்த இரு மனங்களையும் ஒன்று சேர்ப்பதற்கு பெற்றோர்கள் படும் பாடு அப்பப்பா சொல்லவா வேண்டும். ஏழைகள், பணக்காரர்கள் அவர்களின் வசதிக்கேற்ப நடத்தி முடிக்கின்றார்கள். ஆனால் நடுத்தரக் குடும்பத்தினரின் நிலைதான் மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. ஆடம்பரமாகச் செய்ய வேண்டுமென ஆசைப்படுவார்கள். ஆனால், அதற்குரிய வசதி அவர்களுக்கில்லை. ஏழைகள் வீட்டுத் திருமணம் போல எளிதாகவும் செய்ய முடியாத நிலை. அப்படியிருந்தும் கூட கடன் பட்டாவது திருணத்தை முடித்து வைக்கிறார்கள்.

இரு மன அறைகளைச் சேர்த்து வைப்பதற்கு மணவறைக்குத்தான் எவ்வளவு செலவு. இப்படியெல்லாம் செலவு செய்து முடிக்கும் திருமணங்கள் - பாதி வழி சென்று, மீதி வழிபோகாமல் தடுமாறுவது ஏன்? சில மணமக்களிடையே முதலிரவே பிரச்சினைகள் தலை தூக்கித் தாண்டவமாடத் தொடங்கி விடும். கணவன் - மனைவியிடமோ அல்லது மனைவி - கணவரிடமோ உண்மையைச் சொல்லி விடலாம் என்ற நம்பிக்கைதான் . ஆனால் அது சந்தேகத்துக்கு அத்திவாரம் போடவும் காரணமாகின்றது. இதனால் இந்த தம்பதிகள் அன்று தொடக்கம் எதற்கெடுத்தாலும் சந்தேகப்பட்டு, ஒருவாரமோ அல்லது ஒரு மாதத்திலோ ஏன் ஒரு நாளில் கூடப் பிரிந்துவிடுகிறார்கள். இதனால் மனம் நொந்து போவது பெற்றோர்கள்தான்.

சில குடும்பங்களில் எவ்வளவோ பிரச்சினைகள் இருந்தும் கூட, அதை வெளியில் காட்டாமல் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். முதலில் இவருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும். சில குடும்பங்களில் கணவன் பிரச்சினைக்குக் காரணமாக இருந்தாலும், அதைக் கண்டும் காணாத மாதிரி இருக்கிறார். மனைவி. அதேபோல் தான் சில பெண்கள் - கெட்டவர்களாக இருந்தாலும், நாளடைவில் திருத்தி விடலாம் என்ற நம்பிக்கைகளில் சந்தோஷமாக வாழ்கின்றான். இப்படியான குடும்பங்களில் - சந்தேகமெனும் பிசாசு கூடிய கதியில் குடும்பத்தை விட்டே ஓடி விடுகிறது.

சில வீடுகளில் - குடும்பத் தலைவனின் நண்பனாலோ அல்லது நண்பியாலோ பெரும் பிரச்சிகைகள் ஏற்பட வாய்ப்புண்டு. கணவன், தன் மனைவி வேறு ஆண்களுடன் சகஜமாகப் பழகுவதை விரும்பமாட்டான். அதேபோல் தன் கணவன் வேறு பெண்களுடன் நல்லெண்ணத்துடன் பழகினால் கூட மனைவிக்கு சந்தேகம் வந்து விடுகின்றது. கணவன் தன் வீட்டின் அறையொன்று ஒதுக்கி, தன் நண்பனை மனைவிக்கு அறிமுகப்படுத்தி அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு பணிக்கின்றான். காலப் போக்கில் நண்பனும், தன் மனைவியும் கதைத்துச் சிரித்தால், அங்கு அவனுக்கு சந்தேகம் வந்துவிடு கிறது. இதனால் எத்தனையோ வருடங்கள் சந்தோஷ மாக வாழ்ந்த தன் மனைவியை இழந்து விடுகிறான்


இதனால் எவ்வளவு தான் நம்பிக்கையின் நண்பனையோ, நண்பியையோ வீட்டில் சேர்த்து வைத்திருப்பது தவறு. காரணம் - சிலர் நல்ல முறையில் சகோதர பாசம் போல பழகினாலும் சில சந்தர்ப்பங்களில் சந்தேகம் வந்து விட வாய்ப்பு ஏற்படுகிறது. சில வீடுகளில் இப்படிச் சேர்ந்து இருப்பதால் சில விபரீதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

மனைவி வேலைக்கு செல்கிறாள், அப்படியான சந்தர்ப்பங்களில் அவளைத்தேடி எத்தனை ஆண்கள் வருவார்கள். தொலைபேசியில் கூடப் பேசுவார்கள் இதை வைத்துக் கொண்டு, இவளுக்கு என்ன மற்றவர்களோடு எந்த நேரமும் கதை என்று சண்டையிடும் கணவன்மார்களும் நம் நாட்டில் இல்லாமல் இல்லை. இவ்வாறு அவமானப்படுவது கூட கணவனுக்கு ஒரு விளையாட்டாகவே இருக்கிறது. அதேபோல், சில மனைவிமார்களும் கணவன்மார்களில் சந் தேகப்படுறார்கள். இதனால் பாதிக்கப் படுவது பிள்ளைகள் தான். இதைக் கொஞ் சம் சிந்திக்கிறார்களா? இப்படிச் செய்வது மடமை என்று ஒரு நாள்கூட மனிதன் சிந்தனை செய்கின் றானா?



இந்தச் சந்தேகம் வராமல், கணவனும் - மனைவியும் சமாளித்து சந்தோகமான வாழ்க்கை வாழப் பழகிக் கொள்ள வேண்டும். சிலர் சந்தோஷமான குடும்பத்தைக் குழுப்பியடிப்பதற்காகக் கட்டுக் கதைகளைக் கட்டிவிடுவதும், முகவரியில்லாது எழுதி அனுப்புவதும் அல்லது ஏதாவதொரு முறையில் ஒரு சந்தேகம் வரும்படியாகச் செயல் களைச் செய்து அதில் சந்தோஷத்தைக் காண்கிறார்கள். அப்படியான சந் தர்ப்பங்களில் கணவன் - மனைவியிடமோ அல்லது மனைவி - கணவனிடமோ பேசி முடிவெடுக்கவேண்டும் . அதைவிட்டு அவர்கள் அப்படிக் கூறு கிறார்களென்று வீணாகச் சந்தேகத்தில் உங்கள் சந்தோஷங்களை இழக் காதீர்கள். கணவனும், மனைவியும் - ஒருவரையெருவர் புரிந்து கொண்டால் இந்த சந்தேகத்துக்கே இடம் இருக்காது. சிலவிடயங்களில் சந்தேகப்படுவது உண் மையாகவுமிருக்காலாம். அப்படியான சந்தர்ப்பங்களில் மனைவி குற்றம் செய் தால் கணவனும், கணவன் குற்றம் செய்தால் மனைவியும், ஆறுதலான முறையில் நம் குடும்பகௌரவம் வெளியில் போகாமல் பாதுகாப்பதற்கும் பிள்ளைகளின் நலன்களை நாடியும் புத்திகளைச் சொல்லி தடுத்துக் கொள்ளலாம். அதைவிட்டு நீதி மன்றம் வரைக்கும் செல்வது அழகல்ல. சந்தேகம் எரிமலையைப்போன்றது. வீணாக சந்தேகம் கொண்டு, வீண் பழி சுமத்தி, அப்பாவிகளை அநியாயமாகக் கொல்லாதீர்கள். வீணாகப் பழி சுமத்துவதும், பாவங்களில் ஒன்றுதான். இவ்வாறான சந்தேகத்தால் - ஒற்றுமையின்மை கொலை செய்யத் தூண்டுதல், தற்கொலை செய்யத் தூண்டுதல் இப்படியான தீய செயல்கள் தானாகவே மனதில் உருவாகிவிடும்.ஆகவே சந்தேகத்தால் சந்தோசத்தை இழந்து விடாமல் புரிந்துணர்வுடன் ஒன்று பட்டால் குடும்பத்தில் பிரச்சினையே ஏற்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் 'சோஆ' நிறுவனத்தால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட நோயாளருக்கான பொழுதுபோக்கு நிலையத்தைப் படத்தில் காணலாம்.




# கிளிநொச்சி இரணைமாதா பிரதேசத்திற்கென நிகொட் நிறுவனத்தால் 70 லட்சம் ரூபா நிதிஒதுக்கீடு

கிளிநொச்சி இரணைமாதா பிரதேச அபிவிருத்திக்கென 70 லட்சம் ரூபா நிதி நிகொட் நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச அத்தியாவசியத் தேவைகளைக் கருத்திற்கொண்டே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியில் பொதுமண்டபம், முன்பள்ளி அமைத்தல், வீதிப் புனரமைப்புச் செய்தல், சுயதொழில் கடன் வழங்கல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை இரணைமாதா பிரதேசத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் இருமாடி வகுப்பறைக் கட்டடத் தொகுதிகள் அமைப்பதற்கான ஆரம்பவேலைகள் நடைபெற்று வருகின்றன.

# மாவீரர்களின் தியாகங்களை நெஞ்சில் சுமந்து சகல துறையிலும் நாம் வெற்றி பெறவேண்டும்

## - தமிழீழ விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் பாப்பா



(கிளிநொச்சி)

எங்களுடைய தேசியம் மாவீரர்களின் தியாகங்கள் என்பவற்றை நெஞ்சில் சுமந்து, சகல துறைகளிலும் நாம் வெற்றி பெறவேண்டும் எனத தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறையின் மாவீரர் வெற்றிக் கேடயத்துக்கான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போது, அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாவட்ட ரீதியாக மாவீரர் வெற்றிக் கேடயத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் வெற்றிபெறும் கழகங்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள கேணல் கிட்டு ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபெறவுள்ளன. எமது இனத்துக்கும், எமது தேசத்துக்கும் பெருமை சேர்க்கும் வகையில் சகல துறைகளிலும், நாம் வளர்ச்சியடைய வேண்டும். எமது இனத்தின் இருப்பை நிலை நாட்டுவதோடு, எங்களுடைய தேசிய மாவீரர்களின் தியாகங்கள் என்பவற்றை நெஞ்சிலே சுமந்து, சகல துறைகளிலும் வெற்றி பெறவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த இறுதிப் போட்டியில் வட்டககச்சி லக்கி ஸ்ரார் அணி மாவீரர் வெற்றிக் கேடயத்தை பெற்றுக் கொண்டது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் சிறப்புரையை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா நிகழ்த்தினார். தொடர்ந்து பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

# 13 வயதுச் சிறுமிக்கு சட்டவிரோத திருமணம்!

## – புதுக்குடியிருப்பில் சம்பவம்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 13 வயதுடைய சிறுமிக்குச் சட்டவிரோதமான முறையில் பதிவுத் திருமணம் செய்து வைத்த தாயார் உட்பட பலர் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பிரதேசத்தில் 13 வயதுடைய பாடசாலைச் சிறுமிக்குத் திருமணம் செய்துவைக்கப்பட்டதாகக் கிடைத்த தகவலையடுத்துப் புதுக்குடியிருப்பு தமிழீழ காவல்துறையினர், சம்பந்தப்பட்ட மணமகனையும் சிறுமியின் தாயாரையும் திருமணத்துக்கு உடந்தையான சிலரையும் கைது செய்ததுடன், பாதிக்கப்பட்ட சிறுமியைப் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

தமிழீழ காவல்துறையினர் சிறுவர் உரிமைகளைப் பேணுவதில் எப்போதும் விழிப்புடன் செயற்படுவதுடன், இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் புதுக்குடியிருப்புக் காவல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்

# ஆனையிறவு—தட்டுவன்கொட்டி கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை ஆரம்பம்

ஆனையிறவு தட்டுவன் கொட்டிக் கிராமங்களுக்கு இயக்கச்சி சந்திக்கு அண்மையிலுள்ள சவுக்கம் தோட்டக்கிணற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்குரிய ஆரம்ப நடவடிக்கையாக இயக்கச்சி - ஆனையிறவு ஏ - 9 வீதியோரமாக நீர்க்குழாய்கள் நிலத்தின்கீழ் அமைக்கும பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

1990 ஆம் ஆண்டுக்குமுன் இந்தக் கிணற்றில் இருந்தே ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, உமையாள்புரம், நாவற்கொட்டியான் கிராம மக்களுக்கும்- ஆனையிறவு, குறிஞ்சாததீவு, உப்பளங்களில் வேலை செய்த தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கும், ஆனையிறவு இராணுவமுகாம் மற்றும் மினிமுகாம்களுக்கும் குடிநீர் குழாய் மூலம் வழங்கப்பட்டு வந்தது.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற "பலவேகய" இராணுவ நடவடிக்கை காரணமாக ஆனையிறவு உப்பளம் முற்றாக மூடப்பட்டதுடன், இந்தப் பிரதேச மக்களும் முற்றாக இடம்பெயர்ந்தனர். அதன்பின் ஆனையிறவு இராணுவ முகாமுக்கு மட்டும் குழாய்மூலம் குடிநீர் இராணுவப் பாதுகாப்புக்கு மத்தியில் வழங்கப்பட்டதுடன், இயக்கச்சி சந்தியில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டு சவுக்கம் தோட்டக்கிணற்றுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

1999-2000 ஆம் ஆண்டு ஆனையிறவு இராணுவமுகாம் தாக்குதலின்போது, நீர் செல்லும் குழாய்கள் சேதமாக்கப்பட்டதுடன், குழாய் மூலம் நீர் வழங்குதல் முற்றாக நின்றுபோய்விட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் மீளக்குடியமர்ந்த இந்தப் பிரதேச, கிராம மக்கள் ஆனையிறவு உப்பளத்தில் வேலைசெய்யும் ஊழியர்கள் குடிநீர் பெறுவதில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தனர். இவர்களுக்கு உழவு இயந்திரம் மூலமே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது ஆரம்பித்திருக்கும் நிலத்தடிகீழ் குழாய்மூலம் தண்ணீர் வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சியின்மூலம் இந்தப் பிரதேச கிராம மக்களும், ஆனையிறவு உப்பள ஊழியர்களும் தமக்குத் தேவையான குடிநீரைப் பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (21)

# பாண்டியன்குளம் பிரதேசத்தில் சந்திரிகாவின் கொடும்பாவி எரிப்பு

முல்லைத்தீவு - பாண்டியன் குளம் பிரதேசத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

பாண்டியன்குளம் பாடசாலைச் சந்தியில் ஜனாதிபதி சந்திரிகாவின் கொடும்பாவி நிறுத்தி வைக்கப்பட்டு, அதில் பேச்சுவார்த்தை நடக்குமா? இடைக்கால நிர்வாக அரசு கிடைக்குமா? இல்லையெனில் போர் வெடிக்கும் என்ற சுலோக அட்டை தொங்க விடப்பட்டிருந்தது.

இந்தக் கொடும்பாவி நள்ளிரவு பெருமளவான மக்கள், பொது அமைப்புக்களின் முன்னிலையில் எரிக்கப்பட்டது.

# முன்பள்ளி சிறார்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில்- வள்ளிபுனம் பிரதேசத்தின் செந்தமிழ் முன்பள்ளிச் சிறார்களின் கௌரவிப்பு நிகழ்வு, முன்பள்ளி வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கலைச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

# செம்பியன்பற்று உபஅலுவலகத்தில் ஊழியர்கள் பற்றாக்குறை!

பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உபஅலுவலகம் அண்மையில் திறக்கப்பட்டபோதும், போதியளவு ஊழியர்கள் நியமிக்கப்படாமையால் பொதுமக்கள் பிரதேசசபையுடனான தேவைகளைப் பெறுவதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.


இந்த உப அலுவலகத்தில் ஓய்வுபெற்றபின் சேவை நீடிப்பிலுள்ள ஒருவரே இங்கு கடமையாற்றுகிறார். அவர் கடமையின் நிமித்தம் பருத்தித்துறை பிரதேசசபை அலுவலகத்துக்குச் செல்லும் நாட்களில் உபஅலுவலகம் மூடவேண்டிய நிலை ஏற்படுகிறது. (21)

# போஷாக்கு நிலை தொடர்பான கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட சிறார்களின் போஷாக்குநிலை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான சிறப்புக் கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன், முல்லைத்தீவு மாவட்ட பிரதிமாகாண சுகாதாரப் பணிமனையினரால், முல்லைத்தீவு அரச செயலகத்தில் நடத்தப்பட்டது.





இராணுவ நடவடிக்கையின் போது சேதமடைந்த பளை அஞ்சல் அலுவலகத்தை முதலாவது படத்திலும், தனியார் கடைக் கட்டடத்தில் இயங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (21)

# ஏ-9 வீதியை அண்டிய பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணி நிறுத்தம்

அண்மையில் பெய்த கடும்மழை காரணமாக நீர் தேங்கி நிற்பதால், கண்ணிவெடி அகற்றும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இராணுவ முகாம்கள் அமைந்திருந்த ஏ-9 வீதியை அண்டிய ஆனையிறவுப் பகுதி, தர்மக்கேணி, கத்தாப்பு மரத்தடி, கட்டைக்காடு, நித்தியவெட்டைக் கிராமங்களை அண்டிய, பாரிய மண் அணைக்கட்டை அண்டிய பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மற்றும் இயந்திரங்கள் மூலமும் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் நடைபெற்று தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக இந்தப் பகுதிகளில் நீர் தேங்கி நிற்பதாலும், கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தங்கியிருந்த தற்காலிக கொட்டில்கள், கூடாரங்களுள் நீர் நிறைந்திருப்பதாலும் கண்ணிவெடி அகற்றும் வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. (21)

# மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி மாவட்டம் -அம்பாள்புரம் பிரதேசத்தில் நன்னீர் மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அம்பாள்புரம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் யு.என்.எச்.சி.ஆர் இன் நிதியுதவியுடன் இந்தப் பகுதி நன்னீர் மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்கு அல்லால் அரிது*

திருக்குறள்

# நமது நோக்கு

## "புதிய மொந்தையில் பழைய கள்"

சர்வதேச சமூகத்தினரிடமிருந்தும், வடக்கு - கிழக்குவாழ் தமிழ் மக்களிடமிருந்தும், ஏனைய தென்பகுதி சமாதான விரும்பிகள் மற்றும் நியாய சிந்தனையாளர்களிடமிருந்தும் தொடர்ச்சியாகக் கிடைத்துவரும் அழுத்தங்கள், அறிவுறுத்தல்கள் காரணமாக சமாதான முயற்சிகளை - நிர்ப்பந்தங்களின் அடிப்படையிலும், சில தவிர்க்கவே முடியாத தேவைகளின் அடிப்படையிலும் ஏதோவொரு வகையில் தொடர்ந்து மேற்கொள்வதைப் போன்று பாசாங்கு செய்து, காலத்தினை இழுத்தடிக்க நினைக்கும் அரசு, நோர்வேயின் சமாதான ஏற்பாடுகளுக்கான சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஊடாக அனுப்பிவைத்திருந்த பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான புதிய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகள் பயனுள்ளவையாக அமையவில்லையென்றும், அதனை ஏற்று அதன் அடிப்படையில் பேசப்போவதில்லையெனவும் விடுதலைப் புலிகள் தரப்பினால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேயாகும்.

ஏற்கனவே விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப் பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதை அரசின் பங்காளிக் கட்சிகளும், பேரினவாதிகளும், பிக்குமார்களும் கடுமையாக எதிர்த்து வருகின்ற சூழலில், அரசின் புதிய நிகழ்ச்சி நிரலில் உள்ள யோசனைகள் விடுதலைப்புலிகள் தமிழ்மக்களின் அபிலாசைகளை ஓரளவுக்கேனும் திருப்திப் படுத்தும் வகையில் சர்வதேச அரசியல் சட்டநிபுணர்களின் ஆலோசனைகளுடன் உருவாக்கிய இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபை ஏற்கும் நியாயத் தன்மையுடன், அரசு சமாதான நகர்வுகளை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பது அதன் கடந்தகால செயற்பாடுகள் நிரூபித்தே உள்ளன.

அரசின் புதிய நிகழ்ச்சி நிரல் உள்ளடங்கிய யோசனைகள் பேரினவாத பௌத்த மதவாத, சமாதான எதிர்ப்பு சக்திகளை திருப்பதிப்படுத்தும் வகையிலேயே அமைந்திருக்கும் என்பதும், அது தமிழர் தரப்பின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் ஒன்றாக அமைந்திருக்காதென்பதும், அதனைப் படித்து ஆராய்ந்துதான் அறியவேண்டிய ஒன்றல்ல.

தமிழர் உரிமை தொடர்பான விடயங்களில் சிங்கள ஆட்சியாளர் எத்தகைய மனோபாவத்துடன் நடந்து கொள்வார்கள் என்பதை கடந்தகால சரித்திரம் மிகத் தெளிவாகவே நமக்குக் கற்பித்துள்ளது.

இனப்பிரச்சினை கூர்மையடையத் தோன்றியதிலிருந்து இன்றுவரையான மூன்று தசாப்த நீண்டகாலப் பகுதிக்குள் சிங்கள ஆட்சியாளரின் ஜனநாயகத தன்மையானது தமிழருக்கான உரிமை தொடர்பான விடயங்களில் எந்த விதமான ஆக்கபூர்வமான மாற்றங்களையும் எட்டியதாக இல்லை.

மாறாக மேலும் அதிக துவேசமும், வன்மமும் கொண்டதாக தமிழர் மீது யுத்தத்தை மேற்கொள்ளும் மூர்க்கத்தனம் மிக்கதாகவே அது வளர்ச்சி கண்டு வந்துள்ளது.

சிங்கள மேலாதிக்க சிந்தனை கொண்ட அரசியல் மற்றும் ஆட்சித் தலைமைகள் தம்மை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. தொடர்ந்தும் தமிழ் மக்களை புதிய நிகழ்ச்சி நிரல் உள்ளடக்கிய யோசனைகள் உறுதி செய்வதாகவே உள்ளது போலும்.

அதனாலேயே விடுதலைப்புலிகள் அது குறித்த தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள் எனலாம்.

ஏற்கனவே அரசின் யுத்த முனைப்பை மேலும் கூர்மைப்படுத்தும் வகையிலான சமாதான விரோத செயற்பாடுகளால் - பொறுமையிழந்து கொதிப்படைந்துள்ள தமிழ் மக்கள் அரசுக்கெதிரான கண்டன ஆர்ப்பாட்ட பேரணிகளை நடத்தியும் - மகஜர்களைக் கையளித்தும் தமது எதிர்ப்புணர்வை எழுச்சி பூர்வமாக வெளிப்படுத்தத் தொடங்கியுள்ள சமயத்தில், அரசின் இந்தப் புதிய ஏற்றுக் கொள்ள முடியாத யோசனைகள் குறித்த செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது தமிழ் மக்களுக்கு மேலும் சமாதானம் குறித்த - அரசு குறித்த அவநம்பிக்கையை வளர்க்கவே உதவும்.

இது ஆரோக்கியமான சூழலுமல்ல.....!

இந்த வகையில் சிங்கள ஆட்சியதிகாரத்திலுள்ளவர்கள் தொடர்ந்தும் தமிழ்மக்களை ஏமாற்றமுயல்வதின எதிர்விளைவுகள் பாரதூரமானதாகவே இருக்கும் என்பதே நோக்கர்களின் கருத்துமாகும்....

அரசு மீண்டும் புதிய மொந்தையில் பழைய கள்ளையே கிள்ளித்தர முயல்கிறது....

தமிழ் மக்கள் இனியும் இந்த அரச ஏமாற்று உத்திகளுக்கு மயங்கப் போவதில்லை என்பது மட்டும் உறுதி.

## நாடும் நடப்பும்




செய்தி :- எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியே காரணம் என அரச தரப்பினர் குற்றச்சாட்டு

## ஊர்சுற்றியார் பார்வையில்...

# குப்பைகளிலிருந்து நாட்டுப்பற்று வரை

நண்பரும் நானும் வீதியால் சென்று கொண்டிருந்தோம்.

வீதியில் பல இடங்களிலும் குப்பைமேடுகள் காட்சியளித்துக் கொண்டிருந்தன. மாநகர சபையின் வாகனங்கள் குப்பைகளை எடுதது்ச் சென்ற இடங்களில் புதிது புதிதாகவும் மரங்கள், செடிகள் மற்றும் வேலியிலிருந்து அகற்றப்பட்ட பழைய கிடுகுகள், ஓலைகள் என்று குப்பைகள் கொட்டப்பட்டிருந்தன.

ஐரோப்பிய நாடுகளில் அதாவது மேல் நாடுகளில் இந்தக் குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதாகவும், வேறு பல விதமாகக் குப்பைகளைப் பயன்படுத்துவதாகவும் சொல்கிறார்களே, இங்கும் அப்படி முயற்சிசெய்து பார்த்தால் என்ன என்று கேட்டார் நண்பர்.

இது நல்ல யோசனைதான். நீங்கள் யாழ்ப்பாண நகரின் மேயராக வரும் போது, அதைப்பற்றி யோசித்தால் நல்லது என்று நான் சொன்னதும் அவருக்குக் கோபம் வந்து விட்டது.

மேயராக வந்தால் நகரின் அபிவிருத்தி பற்றித்தானா? எல்லோரும் முதலில் சிந்திப்பார்கள்? இந்த மேயர் பதவியில் எவ்வளவு காலத்துக்குத் தொடர்ந்திருக்க முடியும்? மேயராகத் தொடர்ந்திருப்பதற்கு எந்தெந்த உறுப்பினர்கள் இடையூறாக இருப்பார்கள்? மேயர் பதவியில் வேறு எந்த உறுப்பினருக்கு ஆசையிருக்கிறது. அவர் யார் யாரையெல்லாம் வளைத்துப் பிடிப்பார். இவர்களையெல்லாம் எப்படிச் சமாளிப்பது, மேயர்மீது முதலில் யார் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரக் கூடியவர், அவரை எப்படிச் சமாளிப்பது? இப்படி எத்தனையோ பிரச்சனைகளைப் பற்றியோசித்து, அதற்கு சில வழிகளைக் கண்டு பிடித்து தமது மேயர பதவிக்கு இப்போதைக்கு ஆபத்தில்லையென்று உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரல்லவா நகரின் அபிவிருத்தி மற்றும் திட்டங்கள் பற்றி யோசிக்கலாம் என்று சொன்னார்.

இது மட்டுமா? நீர் மேயர்பதவிக்கு வருவதற்காக வட்டாரத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு உதவியாகவும், ஆதரவாகவும் இருந்தவர்கள் உதவிக்கு வருவார்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் நண்பர் தொடர்ந்து சொன்னார் -

கொந்தராத்து வேலைகளுக்குப் பலர் உம்மிடம் வராமலா விடுவார்கள் என்றும் நண்பர் விடாமல் சொன்னார்.

நகரில் கிடக்கும் குப்பைகளைப் பற்றிப் பேசத் தொடங்கி இப்போ மாநகரசபை மேயர், தேர்தல் என்று வேறு குப்பைகளைக் கிளறத்தொடங்கிவிட்டீர் என்று, நான் அவர் பேச்சைக் குப்பையிலிருந்து திருப்பினேன்.

நீர் சொல்வதிலும் நியாயமிருக்கிறதுதென்று சொன்ன நண்பர், யாழ். நகரிலிருந்து குப்பைகளை அகற்றுவதிலுள்ள சிக்கல்பற்றியும், அதைக்கொண்டு போய்ப் புதைப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும், சமீபகாலத்தில் ஆணையாளர் க.குணராசா ஒருவிபரமான அறிக்கைவிட்டிருந்ததை நீர்பார்க்கவில்லையோ என்றும் கேட்டார்.

பார்த்தேன். குப்பைகள் போடுவதற்கு பிளாஸ்ரிக்பைகள், பிளாஸ்டிக் தொட்டிகள்வாங்கி வீட்டுக்காரர்களே தங்கள் வீட்டுக் குப்பைகளைப் பைகளில் போட்டு வீட்டுவாசல்களிலோ அல்லது தெருவில் ஓரிடத்திலோ வைக்கலாம். குப்பைவண்டில்களோ, வாகனங்களோ வந்து அவற்றைக் கொண்டு போகலாம். வீதிகளில் முக்கியமான இடங்களில் பெரிய குப்பைத் தொட்டிகளையும் வைத்து அவற்றிலும் குப்பைகளைச் சேர்க்கலாம் என்றொரு யோசனை ஆணையாளருக்கிருப்பதாகத் தெரிகிறது என்றேன்.

கொழும்பிலும் இப்படி வீட்டுக்குப்பைகளைப் பைகளில் சேர்த்தொடுக்கும் முறையிருக்கிறதென்றார் நண்பர்.

மேல் நாடுகளில் வீதிகளிலோ வீட்டு வாசல்களிலோ குப்பைகள் போடப்படுவதில்லையென்று சொல்கிறார்களே எனறும் நண்பர் கேட்டார்.

ஐரோப்பிய நாடுகளில் வீடுகளில் சமையலறையில் பிளாஸ்டிக கூடைகள் வைத்துக் கொள்வார்கள். அந்தக் கூடையில் கீழ்ப்பாகத்தில் ஒரு வளையம் மாதிரி ஒன்று பொருத்தப்பட்டிருக்கும், அதைக் காலால் மிதித்தால் கூடையின் வாய்திறந்து கொள்ளும். குப்பைகளை உள்ளே போடலாம் இந்தக் கூடைக்குள் பொலித்தன் பைகளைத் திறந்தபடி வைத்தால் குப்பைகள் பைகளில் போய்க் கிடக்கும். அவை நிரம்பியதும் அந்தப் பொலித்தன்பைகளை எடுத்து தலையில் முடிச்சுப் போட்டுக் கட்டி, அந்த வீடுகளுக்கு வெளியே பிளாஸ்டிக்கிலான பெரிய குப்பைத்தொட்டிகள் மூடிய நிலையில் இருக்கும். பொலித்தீன் குப்பைப்பைகளை இவற்றில் போட்டு மூடிவிடவேண்டும். குப்பைகள் வெளியே சிந்தமாட்டாது என்றேன்.

இங்கும் பெரிய குப்பைத் தொட்டிகள், கொழும்பிலும் கூட இருக்கின்றன. காகங்களும், நாய்களும் கிண்டி அவற்றை [illegible] என்றார் நண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே மூடியில்லாத குப்பைத் தொட்டிகளைக் காணமுடியாது. இதுதவிர அங்கு எங்கள் நாட்டில் போல் தெரு நாய்கள் ஆலாய்ப்பறந்து திரிவதில்லை. காகங்களும் பறப்பதில்லை புறாக்கள் தான் பெரும்பாலும் திரிவதைக் காணலாம். அவை குப்பைத் தொட்டிகளின் பக்கம் போவதில்லை

வீட்டில் குப்பைப் பைகளில் குப்பைகளைப் போடும் போது, எல்லாக் குப்பைகளையும் ஒன்றாகப் போடமுடியாது. பிளாஸ்டிக் போத்தல்கள், சாமான்கள் ஒருபையிலும், கண்ணாடிப் போத்தல்கள் சாமான்கள் மற்றொரு பையிலும் மீதமான உணவுகள் சமையலுக்குப் பாவித்தவை போக மீதியுள்ள குப்பைகள ஒரு பையிலுமாகத் தெரிவு செய்து பைகளைக் கட்டிப் போடவேண்டும்.

அங்கே நாய்களே இல்லையா, என்று கேட்டார் நண்பர்.

நாய்கள் எல்லாம்வளர்ப்பு நாய்கள் தான் செல்லப்பிராணிகள். அவைகளை நாய்கள் என்று சொன்னால் வீட்டுக்காரருக்கு அதாவது எஜமான்களுக்கு கோபம் வரும். நாய்களுக்கு ஒவவொரு பெயர் இருககும். காலையில், மதியத்தில், மாலையில், இரவில் குறிப்பிட்ட நேரத்தில் அவற்றிற்கெனத் தயாரிக்கப்பட்ட உணவு கொடுக்கப்படும். அதேபோன்று வெளியே சென்று அவற்றின் இயற்கை உபாதைகளைத் தீர்ப்பதற்கும் அவைகள் கொண்டு செல்லப்படும். மனிதர்களைப் போலவே அவையும் குறித்த நேரத்தில் தங்கள் கடமைகளை நிறைவேற்றப் பழக்கப் படுத்தியுள்ளனர்

நாய்களை வளர்ப்பதற்கும், கவனிப்பதற்கும் சில வீடுகளில் தனியாக ஓர் ஆள் அமர்த்தப்பட்டிருப்பர். வீட்டில் செல்லப் பிராணியாக வளர்க்கும் பூனைகளுக்கும் தனி மவுசுதான்.

பாரிஸில் வில்ற்றானூஸ் என்ற இடத்தில் எனது மகனின் நண்பனின் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தேன். அவனின் மனைவிக்கு ஒரு வேலை இருப்புதாக அறிவித்தல் கிடைத்தது. அவர் போனார்.

மாலையில் அவர் திரும்பி வந்ததும் என்னவேலை என்று கேட்டேன்.

"பூனை வளர்ப்பு" என்றார் அவர். போனதுமே பூனை வளர்ப்புப் பற்றியும், பூனையை எப்படிப் பராமரிக்கவேண்டும் என்பது பற்றியெல்லாம் சொல்லிவிட்டு முதலில் பூனைக்கு உங்களைப் பிடித்திருக்கிறதா? என்று பார்க்கவேண்டும் என்று எஜமானி சொன்னாராம். பின்னர் அந்தப் பூனையைக் கூப்பிட்டுத் தங்களுக்கருகில் வைத்துக்கொண்டார்கள். வேலைக்குப்போன இந்தப் பெண்ணைப் பூனைகளுக்கருகில் போகும்படி சொன்னார்கள். அவர் அதன் அருகில் சென்றபோது அது இவரை ஏற இறங்கப் பார்த்துவிட்டுத் தூரப்போகாமல் அவருக்கு அருகில் வந்ததாம்.

பூனை இவரை ஏற்றுக்கொண்டு விட்டதென்று மகிழ்ச்சியுடன் எஜமானி சொன்னாராம்.

இன்றுவரை இந்தப் பெண்தான் அந்தப் பூனைக்கு வளர்ப்புத் தாய்.

இதுமட்டுமல்ல வீட்டுக்குள் சேரும் குப்பைகளைத் தரம் பிரித்து, பைகளில் சேர்த்து குப்பையுடன் சேர்ப்பதில்கூட நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. பிரான்சில் பிளாஸ்டிக் பொருட்களைத் தனியாகவும், கழிவுகளைத் தனியாகவும் பிரிக்க வேண்டும்.

ஜேர்மனியில் பிளாஸ்டிக் பொருட்கள், கழிவுகள், தகரங்கள் தனித்தனியாகப் பிரிக்கவேண்டும்.

ஜேர்மனியில் வீதிகள், பொது இடங்கள் எல்லாமே மிகச் சுத்தமாகப் பராமரிக்கப்படுகின்றன. வீதிகளில் குப்பைகளையோ, சிகரட் கட்டைகளையோ காணமுடியாது. பிரான்சிலும், லண்டனிலும் பிரதான பாதைகள், முக்கிய இடங்கள் தவிர மற்றைய இடங்களில் சிகரட் கட்டைகளையும் காணலாம், குப்பைகளும் கிடக்கும்.

சுவிட்சர்லாந்து மிகச் சுத்தம் என்று சொல்கிறார்கள். இதுவரை நான் அங்கே போகவில்லை.

பொதுவாக இலங்கை, இந்திய நாடுகளை - ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது.

ஐரோப்பிய நாடுகளில் பஸ்வண்டிகள், ரயில்வண்டிகள் போன்ற பொது வாகனங்கள் மிகவும் சுத்தமாக இருக்கும். ஒரு துண்டுப்பேப்பரோ, கடலைக்கோது, மிட்டாய் மீதி எதையும் இவற்றில் காணமுடியாது.

அங்குள்ள மக்கள் பொதுச் சொத்துக்கள் தங்கள் சொத்து என்று மதித்து நடக்கிறார்கள். மற்றைய மனிதர்களுக்கு அசௌகரியம் ஏற்படாமல் நடந்து கொள்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக அங்குள்ள மக்களுக்கு நாட்டுப்பற்று அதிகமாகவே இருக்கிறது. என்று சொல்லி முடித்தேன்.

எங்கள் மக்களுக்கு எப்போது நாட்டுப்பற்றுவரும் என்றார் நண்பர்.

எங்களுக்கென்று நாம் முதலில் நாட்டை மீட்போம். அதன் பின்னரும் நாட்டுப் பற்றுவரவில்லையானால் கொஞ்சம் கடுமையான வழிகளைப் பின்பற்றியாவது நாட்டுப்பற்றைக் கொண்டு வரத்தான் வேண்டும் என்றேன். உண்மை தான் என்றார் நண்பர்.

**செய்திக்கட்டுரை...** -த.பிருந்தாகரன்




# நெருக்கடிகளை எதிர்கொள்ளும் ஒரு பாடசாலையின் அவலநிலை!

வலி.மேற்குப் பிரதேசத்தில் காணப் படுகின்ற பிரபல பாடசாலைகளில் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமும் ஒன்று. இந்தப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில், அதிகூடிய மாணவர்கள் இந்தப் பாடசாலையிலேயே கல்வி பயில்கின்றனர். இந்தப் பாடசாலையில் போதிய வளங்கள் இல்லாத நிலையிலும் பல மட்டங்களிலும் தனது சாதனைகளைப் படைத்து வருகின்றது.

இந்தப் பாடசாலை அமைந்துள்ள ஒரு பகுதி காணியை பலர் உரிமை கோருகின்றனர். இதனால் இந்தக் காணிக்குரிய பணம் செலுததப்படவேண்டி உள்ளது. எனவே காணிக்குரிய பணம் செலுத்தப்படும் வரை கட்டடங்கள் அமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் கட்டடம் அமைப்பதற்கு என வழங்கப்பட்ட பல லட்சம் ரூபா திரும்பிச் சென்றுள்ளது. இதற்குக் காரணம், காணி பாடசாலையின் பெயரில் இல்லாததேஆகும்.

ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு முக்கியமானது பாடசாலை ஆகும். யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் புதிய கட்டடங்கள், ஆய்வுகூடங்கள், தளபாடங்கள் அனைத்தும் புதிதாகக் கிடைகப்பெற்றுப் புதுப்பொலிவுடன் விளங்கி கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்தப் பாடசாலைக்கு மட்டும் கிடைத்த பல லட்சம் ரூபாவும் திருமபிச் செல்ல, கொட்டகையிலும் தற்காலிக கட்டடங்களிலும் தொடர்ந்தும் வகுப்புக்கள் நடைபெறவேண்டுமா?

கல்வியில் இன்று தேசிய பாடசாலைகளுக்கு சரி நிகரான சாதனைகள் படைத்துக் கொண்டிருக்கும் இந்தப் பாடசாலை, இணைபாட



விதான செயற்பாடுகளிலும் தேசிய மட்டம் வரை சென்று பல சாதனைகளை நிலைநாட்டி, வெற்றிப் பாதையில் வீறு நடை போட்டுக் கொண்டிருக்கும் நேரம் இது. மேலும் சங்கானை கல்விக் கோட்டத்தில் கரப்பந்தாட்டம் என்றால் சிவப்பிரகாச மகாவித்தியாலயம் என்று சொல்லும் அளவுக்குச் சாதனை புரிந்து வருகிறது. அத்துடன் உடற்பயிற்சி, குழுப்போட்டிகளிலும் தனது முத்திரையைப் பதித்து வருகிறது.

இவ்வாறு பல சாதனைகளைப் புரிந்தும், நிரந்தரமான காணி இல்லாத காரணத்தினால் இனி வரும் காலங்களில் இந்தப் பாடசாலைக்கு எந்தவித கட்டடங்களும் கிடைக்கப் போவதில்லை.

இந்தப் பாடசாலைக்குக் காணி வாங்குவதற்கு அரசாங்கத்தால் நிதி வழங்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பல முறை உதவிகள் கேட்டபோதும் எவரும் உதவிகள் வழங்க முன்வரவில்லை வழங்கவும் அவர்களது விதிமுறைகள் இடம் அளிக்காது.

இந்தக் காணிப் பிரச்சினையை நீக்க பாடசாலை நலன் விரும்பிகள் ஒன்றுகூடி, குழு ஒன்றை அமைத்துள்ளனர். இவர்கள் தமது அயராத முயற்சிகளினால் இந்தப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று காணி வாங்குவதற்குரிய நிதியை திரட்டி வருகின்றனர். இந்தக் காணி வாங்குவதற்குரிய நிதியின் ஒரு பகுதியைவெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர்கள் வழங்க முன் வந்துள்ளனர். இந்த நிதி காணி கொள்வனவு செய்யத் தேவையான நிதியின் ஒரு சிறுதொகை என்பது குறிப்பிடத்தக்கது.

மிகவிரைவில் காணியைக் கொளவனவு செய்தால் மட்டுமே இனி வரக்கூடிய நிதியைக் கொண்டு கட்டடம் அமைக்க முடியும். இல்லையேல் அதுவும் வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டு விடும் இந்தக் காணிப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் மேலும் பலகட்டடங்கள் வரவாய்ப்புண்டு. எனவே இந்தப் பிரதேச மக்கள் நலன் விரும்பிகள், துறைசார் அலுவலர்கள் அனைவரும் இந்தப் பாடசாலையின் எதிர்காலம் பற்றி சற்றுச் சிந்தியுங்கள்.

# மார்கழி நன்னாளும் திருவெம்பாவையும்

தை மாதம் முதல் ஆனி மாதம் வரை ஆறு மாதங்கள் தேவர்களுக்குப் பகற்காலம் என்றும் ஆடி மாதம் முதல் மார்கழி வரையிலான ஆறு மாதங்கள் அவர்களுக்கு இராக்காலம் என்றும் கூறப்படுகிறது. மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறை யாமம் ஆகும்.

மார்கழி மாதத்தில் அதிகாலையில் துயிலெழுந்து, ஏனையோரையும் துயிலெழுப்பிக் கூட்டாகச் சென்று ஆற்றிலும் ஏனைய நீர் நிலைகளிலும் நீராடி, நோன்பு நோற்று, இறைவனை வழிபாடு செய்து உயர்வு பெறும் வழக்கம் சைவ மக்களிடையே மிகப் பண்டைய காலந்தொட்டு இருந்து வருகிறது.

இந்த நோன்பை மார்கழி நோன்பு என்றும், பாவை நோன்பு என்றும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. மார்கழி மாதம் முழுவதும் இந்த நோன்பை அனுஷ்டிக்க முடியாதவர்கள் மார்கழி மாதத்துப் பூரணை நாளை இறுதியாகக் கொண்டு, முதல் பத்து நாட்கள் இதனை அனுஷ்டிப்பர். இந்தப் பத்து நாட்களையும் திருவெம்பாவைக் காலம் என்பர். பத்தாம் நாள் திருவாதிரை நட்சத்திரத்துடன் கூடிய முழுமதி நாளாகும்.

இந்த நாட்களில் திருக்கோவில்களிலே அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பாடப்படும். அதனைத் தொடர்ந்து திருவெம்பாவை பாடப்படும். சிவன் கோவில்களில் சிறப்பாக நடைபெற்றாலும், ஊர்கள் தோறும் உள்ள எல்லா ஆலயங்களிலும் பக்தி பூர்வமாகத் திருவெம்பாவை உற்சவங்கள் நடைபெறுகின்றன.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் சிவனைத் தரிசனம் செய்ய வந்த போது, மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் வழக்கப்படி பொழுது புலர்வதற்கு முன்னர், வைகறை யாமத்தில் துயிலெழுந்து, வீடு வீடாகச் சென்று தம் தோழியர்களையும் கூவி எழுப்பி அவர்களையும் அழைத்துக் கொண்டு ஆடியும், பாடியும் ஆற்றுக்குச் சென்று நீராடி விட்டு, பார்வதி தேவியின் பிரதிமையை ஈரமண்ணினால் செய்து வைத்துத் தத்தம் வேண்டுதல்கள் நிறைவேற வழிபாடு செய்யும் பக்திப் பரவசக் காட்சியைக் கண்ணுற்றார் போலும். தாமும் இறைவனைத் தரிசிக்க விரும்பித் தன்னையும் ஒரு பெண்ணாகப் பாவித்து கண்ணுற்ற நிகழ்ச்சிகளுடன் தன்னையும் இணைத்துக் கொண்டு, நாயகன், நாயகி பாவத்தில் பாவைப் பாட்டுக்களைப் பாடித் தன் நிலையை வெளிப்படுத்த எண்ணினார் போலும்.

இவ்வாறாக மாணிக்கவாசகரால் திருவண்ணாமலையில் அருளப்பட்ட திருவெம்பாவைப் பாடல்களை இன்றும் சைவக் கோவில்களில் மார்கழி மாதத்துப் பூர்வ பட்ச ஆறாம் நாள் தொடங்கிப் பூரணை ஈறாகவுள்ள பத்து நாட்களிலும் அதிகாலையில் உள்ளம் உருகப் பாடிப் பரவுவதைச் சைவமக்கள் நியமமாகக் கொண்டு வருகின்றனர்.

திருவெம்பாவைக் காலங்களில் சிவனடியார்கள் பொழுது புலர்வதன் முன் நீராடி இறை சிந்தனையுடன், வீதி வீதியாகச் சென்று, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களை இசைத்து வீடுகளில் வாயில்களில் வெண்சங்கம் முழங்கும் வழக்கம் நம் ஊர்களில் இருந்து வருகிறது.

திருக்கோயில் இல்லாத ஊர், திருவெண்ணீறு வழங்காத ஊர், வெண்சங்கு முழங்காத ஊர் என்பவை ஊர்களல்ல, அவை அடவி காடுகளே என்று ஆன்றோர் கொண்டனர். நமது முன்னோர்கள் இவற்றையெல்லாம் ஊக்குவித்தனர். ஆனால் தற்காலத்தில் இவை அருகி வருவதை விசனத்துடன் குறிப்பிட வேண்டும். இவை எமது கலாசாரம் என்பதை மறந்துவிடலாகாது.

திருவெம்பாவையின் நிறைவு தினமாகிய திருவாதிரைத் திருநாளில், அதிகாலையில் சிதம்பரத்தில் நடேசர் அபிஷேகமும், ஆருத்திரா தரிசனமும் இடம் பெறுகின்றன. ஈழத்துச் சிதம்பரம் எனும் சிறப்புப் பெற்ற காரைநகர் சிவன் கோவிலிலும் திருவாதிரைத் தரிசனம் பக்தி பூர்வமாக நிகழ்கின்றது.

இவ்வாறாக மார்கழி மாதத்தில் அதிகாலையில் துயில் நீத்து சிவனை நினைத்து திருவெம்பாவை ஓதுகின்ற பொழுதில், நாமெல்லாம் இணைந்து வழிபடுவோமாக.

மதுரகவி.
காரை.எம்.பி.அருளானந்தன்

## நூல் அகம்



நூல்: தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆசிரியர்: தி.உதயசூரியன்

வெளியீடு: கண்ணம்மா பதிப்பகம், யாழ்ப்பாணம்.

தாய்மொழிக்கும், கல்விக்கும் உயிர்ப்பான நெருங்கிய தொடர்பு இருக்கும். எமது கல்வியமைப்பில் தாய் மொழிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இது இன்றைய உலகளாவிய கல்விச் செல்நெறியாக வியாபித்துள்ளது. எண்ணக்கருவாக்கத்தினூடாக ஒருவனுடைய தாய் மொழித்திறன் எவ்வளவுக்கு உள்ளதோ, அவ்வளவுக்கு அவன் சூழலுக்குப் பொருத்தப்பாடுடையவனாக, சூழலை வெற்றி கொள்ளக்கூடியவனாக இருப்பான். இந்தவகையில் திரு.தி.உதயசூரியன் அவர்களின் தமிழ் மொழியும் இலக்கியமும் செயல்நூல் வெளியீடு மிகுந்த பயனுறுதி வாய்ந்த செயலாக்கமாகவுள்ளது.

அதுவும் தரம் 9 மாணவர்களைக் குறிப்பாகக் கொண்டு நவீன உள - மொழியியல் பிரயோக அடிப்படையில், இந்நூல் பல்வேறு நுட்பவியலாளர்களினூடாக ஆக்கப்பட்டிருக்கின்றது. உலகம் முழுவதிலும் வாழும் பிள்ளைகள் தம் மொழி அறிவை ஒரேமாதிரியாகவே விருத்தி செய்கின்றனர் என உள - மொழியியல் வல்லுநர் நோம் சொம்ஸ்கி (**Noam Chomsky**) தெரிவிக்கின்றார். அவர் மொழியறிவு விருத்தியடையப் பின்வரும் மூன்று தேவைகளை இயம்புகின்றார்.

I தொடர்பாடலுக்குரிய தேவை - மற்றவருடன் தொடர்பு கொள்ள, தேவைகளை நிறைவேற்ற, கற்றலை மேற்கொள்ளத் தொடர்பாடல் தேவையாகவுள்ளது.

II தாம் வாழும் உலகைப் புரிந்துகொள்ளும் தேவை - தம்மைச் சுற்றியுள்ளவை பற்றியும், நடப்பவை பற்றியும், அறிந்து கொள்ளவேண்டிய அவசியம் இதனாலேயே பிரதிபலிக்கின்றது.

III கட்டுப்படுத்துவதற்கான தேவை - உயிர்வாழ்வதற்கும், குடும்பத்தில், சமூகத்தில் தமது இடத்தை உறுதிப்படுத்தவும், தம் ஆளுமையை விருத்தி செய்யவும் இந்தத் தேவை பயன்படுகின்றது.

இந்தத் தேவைகளை மையமாக வைத்து மாணவர்களுடைய தமிழ்மொழி, இலக்கிய ஆற்றலை மேம்படுத்த அழகு, ஓவியக் கலை, மற்றவர்களுக்காய்ப் பட்டதுயர், காக்கை காட்டியவழி, பாஞ்சாலி சபதம், புலவரும் வறுமையும்... போன்ற தலைப்புக்களில் மாணவர்கள் தாமாக விரும்பிக் கற்கும் செயலாற்றுகைகளை நூலாசிரியர் உதயசூரியன் வளமாகக் கையாண்டிருக்கின்றார். இன்றைய நவீன கல்விச் செல்நெறியில் சுயமான கற்றலுக்கே முதலிடம் கொடுக்கப்படுகின்றது. அந்தவகையில் மாணவர்கள் மொழியறிவை விருத்தியாக்கவும், பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறவும் இந்த நூல் நல்வழி காட்டுகின்றது. இதற்காகக் கடுமையாக உழைத்த நூலாசிரியர் பாராட்டப்படவேண்டியவர்.

இந்த நூலின் வழிகாட்டல் பயிற்சியில் கலைத் திட்டத்தினூடும், சமகால விடயங்களை உள்ளடக்கியதாகவும், சமூக விழுமியங்களைப் பிரதிபலிப்பவையாகவும், அடிப்படைத் தேர்ச்சிகளை விருத்தி செய்பவையாகவுமுள்ளன. கிரகித்தல், எழுத்து, இலக்கணம், மொழிவளம், எண்ணக்கருவாக்கம், மொழிவாண்மை, கணிப்பீடுகள், ஆகிய கூறுகள் இந்த நூலில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளமை, தமிழ் மொழிப்பாடத் தேர்ச்சி விருத்தியை ஏற்படுத்துகின்றது.

மற்றும் இன்று எமது மாணவர்களிடையே சுய ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை. இது எம் கல்விமுறையில் பெரும் குறைபாடாக இருந்து வருகின்றது. இந்த நிலையைப் போக்கத் தற்போது பல முன் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாணவர் மையக் கற்றல் செயற்திட்டங்கள், புத்தாக்கங்களை உருவாக்க வழிகாட்டல், ஊக்குவிப்புக்களை வழங்குதல் என்பவையாகவுள்ளன. இந்தத் துறையை மேலும் வளம்படுத்த நூல் வெளியீடுகள் அவசியமானவை. அந்த வகையில் மாணவர்களுடைய புத்தாக்கத் திறன்களை விருத்தி செய்யும் பல அம்சங்களை தமிழ் மொழியும் இலக்கணமும் செயல்நூல் தரம் 9 கொண்டுள்ளது.

தமிழ் மொழியறிவையும், குறிப்பாக எழுத்து, ஆக்கப் படைப்பாக்கத் திறன்களை இடைநிலை மாணவர்களிடையே வளர்க்க, கற்றல் - கற்பித்தல் முறைமைகளையும் - உத்திகளையும், நுட்பங்களையும், கணிப்பீட்டுக் கருவிகளையும், நியதிகளையும் முறையாக ஆசிரியர்கள் பிரயோகிக்கவேண்டும். தரம் 9 இல் இதற்கான வழிகாட்டல்களையும் இந்த நூல் கொண்டுள்ளது. எமது ஈழத்தின் மூதறிஞர் சொக்கன் அவர்கள் பற்றிப் பத்திரிகையில் வந்த கட்டுரையை வெளியிட்டு, இவ்வாறே உங்களுக்குப் பிடித்த ஆசிரியர் பற்றி எழுதுக என வழிகாட்டப்பட்ட விடயம் நூலுக்கு மேலும் அணி சேர்க்கின்றது. இதேபோல பல நடைமுறை சார்ந்த பிரயோகங்கள் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் வழிகாட்டி உதவுகின்றது.

இன்றைய மாணவர்களுடைய மொழித் திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவற்றின் பிரயோகநிலை தாய்மொழியிலேயே விருத்தி குன்றிக் காணப்படுகின்றது. கவர்ச்சிகரமான - மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் சூழ்நிலைகளினூடாக இந்த நான்கு திறன்களையும் வளர்க்க வேண்டியுள்ளது. மொழித் திறன்களினூடாக இலக்கிய, அழகியல் ரசனையை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதனூடாக ரசிக்கும் ஆற்றலை மேம்படுத்த முடியும். இதற்கு,

I பல்வேறு வகையான கலையாக்கங்களை, இலக்கியங்களை மாணவர்கள் அறிய வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

II கலையாக்கங்களை, புதிய இலக்கியங்களை உருவாக்க வழிகாட்டல்.

III கலையாக்கங்களை விமர்சன ரீதியாக நோக்கிப் பகுப்பாய்வித்தல்.

IV கலையாக்கங்களுடன் இணைந்த சமூக, இன, கலாசார, தேசிய உணர்வுகளை மதிப்பிடல்.

இந்தச் செயன்முறைகளைப் பாடசாலை வகுப்பறைகளில் ஏற்படுத்தவும், மாணவர்கள் சுயமாக விருத்திகாணவும் இந்த நூல் பல வழிகாட்டல்களை இயம்பி நிற்கின்றது. எம் எதிர்காலச் சந்ததிகளான மாணவர்களின் மூலமாக தாய்மொழிப் பற்றை, தாய்மொழி அறிவை இன்று அதிகரிக்க வேண்டியுள்ளது.


- பா.தனபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராக்கின் மொசூல் நகரிலுள்ள

# அமெரிக்கமுகாம் தாக்குதல்

# நெருக்கடிக்குள் ரம்ஸ்பீல்ட்!




ஈராக்கின் வடபகுதி நகரான மொசூல் பகுதியில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவ முகாம்மீது இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டமை தொடர்பாக அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ரம்ஸ் பீல்ட் கடும் அழுத்தத்திற்குள்ளாகியுள்ளார்.

படையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் எவ்வாறு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதென ஊடகவியலாளர் ரம்ஸ் பீல்டை கேட்ட வேளை - படையினரின் பாதுகாப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிலிருந்து எனது கடமை தோல்வியில் முடிந்துவிட்டது. உண்மையாக நான் இது குறித்து கவலையடைகின்றேன் எனத் தெரிவித்தார். இது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க கூட்டுப்படையின் பிரதம அதிகாரி ஜெனரல் றிச்சட் மையேர்ஸ் -

இந்தத் தாக்குதல் தற்கொலையாளி ஒருவர் மூலமே நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக எவ்.பி.ஐ. விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. அத்துடன் இந்த முகாம் மீது தற்கொலையாளி எவ்வாறு தாக்குதலை மேற்கொண்டார் என நாம் கோரியுள்ளோம் எனத் தெரிவித்தார். ஆனாலும், தற்கொலையாளிதான் தாக்குதலை நடத்தினார் என்பதற்கான ஆதாரங்களைத் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

இந்தத் தாக்குதலையடுத்து மொசூல் நகரத்தில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. மொசூலின் ஐந்து மிகப்பெரிய பாலங்களூடான போக்குவரத்தை ஆளுநர் தடைசெய்தார். அமெரிக்கத் துருப்புக்கள் தாக்குதலாளர்களைக் கைதுசெய்யும் முகமாக அப்பகுதியில் பாரிய தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.








வீதிகள் அனைத்திலும் எவ்வித நடமாட்டமும் இருக்கவில்லை. கடைகள் மற்றும் பள்ளிவாசல்கள் கூட இழுத்து மூடப்பட்டன. இதனிடையே கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட இரண்டு பிரான்ஸ் பத்திரிகையாளர்கள் விடுதலை செய்யப்பட்ட நிலையில் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

அத்துடன் ஈராக்கைப் புனரமைக்கவென சர்வதேச நாடுகளால் வழங்கப்பட்ட 325 மில்லியன் அமெரிக்க டொலரை அங்கு நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அந்தநாடுகள் மீளப் பெற்றுள்ளன.

## புதிய ரொக்கட் வெள்ளோட்டம்



கொலம்பிய ரொக்கட் விபத்துக்குப் பிறகு அமெரிக்காவின் நாஸா விண்வெளி நிறுவனம் 'டெல்டா - 4' என்ற புதிய ரொக்கட்டைத் தயாரித்துள்ளது. நவீன வசதிகளுடன் உயர் தொழில்நுட்பத்துடன் இது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த போயிங் டெல்டா - 4 ரொக்கட் அதிக எடையையும் செயற்கைக் கோள்களையும் சுமந்துசெல்லும். புளோரிடாவில் உள்ள கெப்கலைரால் விமானப் படைத் தளத்திலிருந்து சோதனை முறையில் முறைபபடி இந்த ரொக்கட் செலுத்தப்பட்டது. புகையைக் கக்கியபடி ரொக்கட் புறப்பட்ட காட்சி.

# இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் காலமானார்



இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் தனது 83 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார். மூச்சுவிடுவதில் சிரமம் ஏற பட்டதால் கடந்த 9ஆம் திகதி டெல்கி அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவரது உடல் நிலை கடந்த வாரம் கொஞ்சம் தேறியது.

அப்போது தன்னைச் சந்தித்த ஜனாதிபதி அப்துல் கலாம் உள்ளிட்டோருடன் ராவால் பேச முடிந்தது.

தொடர்ந்து மருத்துவமனையிலேயே சிகிச்சை பெற்று வந்த ராவுக்கு நேற்று பிற்பகல் 2.40 மணியளவில் மாரடைப்பு ஏற்பட்டது. இதையடுத்து அவர் மரணமடைந்தார்.

இந்தத் தகவலை அவரது உதவியாளர் சேத்தன் சர்மா தெரிவித்தார். இவரது மரணத்தின்போது அவரது மகன் பிரபாகர், ராவ் அருகில் இருந்தார். இவரது மரணத்தைத் தொடர்ந்து இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் உடனடியாக ஒத்திவைக்கப் பட்டன.

மறைந்த ராவ்க்கு 3 மகன்களும் 5 மகள்களும் உள்ளனர். இதில் ஒரு மகனான ரங்ரா ராவ் ஆந்திர மாநில அமைச்சராக உள்ளார்.

1991ஆம் ஆண்டுமுதல் 1996ஆம் ஆண்டுவரை பிரதமராக இருந்த ராவ் தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்ள ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பிகளுக்கு லஞ்சம் வழங்கியமை மேலும் பல சிறிய கட்சிகளை உடைத்துப் பதவியைக் காப்பாற்றிக் கொண்டமை தொடர்பான வழக்குகளில் பின்னர் சிக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நேபாளத்தலைநகரின் போக்குவரத்து மாவோ கிளர்ச்சிவாதிகளால் தடை!



(காத்மண்டு)

நேபாளத் தலைநகர் காத்மண்டுவிற்கான போக்குவரத்தை மாவோ கிளர்ச்சிவாதிகள் தடைசெய்துள்ளனர்.

தலைநகருக்கான போக்குவரத்தை மாவோ கிளர்சிவாதிகள் தடைசெய்யக் காரணம் படையினர் மலைப்பகுதிகளில் மேற்கொண்ட நடவடிகைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவே எனக் கூறப்படுகிறது.

நேபாள மன்னர் ஞனேந்திரா 11 நாள் விஜயமாக நேற்று இந்தியாவுக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் நேபாளில் நடைபெறும் மோதல்கள் தொடர்பாகக் கலந்துரையாடி நிகழ்ச்சிநிரல் ஒன்றைத் தயாரிக்கவுள்ளார். இந்த நிலையிலேயே மாவோ கிளர்ச்சிவாதிகள் தலைநகருக்கான போக்குவரத்தைத் தடைசெய்துள்ளனர்.

இந்தியா சென்றுள்ள மன்னர் ஞனேந்திரா இந்திய - நேபாள எல்லைப் பகுதிக்கும் விஜயம் செய்வாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகருக்கான வீதித் தடையால் பெருமளவு வாகனங்கள் வீதிகளில் தரித்து நிற்பதுடன் சாரதிகள் அவற்றைச் செலுத்துவதற்கும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதமும் தலைநருக்கான போக்குவரத்தைக் கிளர்ச்சிவாதிகள் தடை செய்ததால் அங்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்றைய தினம் இந்திய - நேபாள எல்லைப் பகுதியில் நேபாளப் படையினருக்கும் மாவோ கிளர்ச்சிவாதிகளுக்குமிடையே மோதல் இடம்பெற்றதாகவும், இதில் படையினர், கிளர்ச்சிவாதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாகவும் ஆனாலும் இது தொடர்பான சேதவிபரங்கள் எவையும் வெளிவரவில்லை எனவும் தகவல்கள் தெரிவித்தன.

# பலூஜாவில் இடம்பெயர்ந்த மக்களில் 2000 பேர் மீளக்குடியமர அனுமதி!



அமெரிக்க கூட்டணிப்படைகளுக்கும் இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் பலூஜாவில் மோதல் நடந்த வேளை இடம் பெயர்ந்த மக்களில் 2000 பேர் மீளவும் தமது இடங்களில் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலூஜாவிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டமை இதுவே முதற்தடவையென்பது குறிப்பிடத்தக்கது.

மீளக்குடியமரும் மக்களின் கைவிரல் அடையாளம் மற்றும் அவர்களின் சகலவிபரங்களையும் அமெரிக்கப்படையினர் தமது சோதனைச் சாவடியில் பதிந்து வருகின்றனர். இவ்வாறு மீளத் திரும்பிய மக்கள் அழிவடைந்த தமது வாழ்விடங்களைப் பார்த்து அதிர்ச்சியடைவார்களென அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதல்கள் தொடர்ந்த வேளையிலும் இடம்பெயர்ந்த மக்கள் தம்மைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு வற்புறுத்தி வந்ததாக ஈராக்கின் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த இடம் பெயர்ந்த மக்களுக்கு நாம், பலூஜாவில் இடிந்த கட்டட இடிபாடுகள் இதுவரை அகற்றப்படவில்லை உங்களது வீடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. வீதிகள் எல்லாம் மதிவெடிகள், கண்ணிவெடிகள் உள்ளன எனத் தெரிவித்தோம். ஆனாலும் அவர்கள் தமது சொந்த இடங்களில் தம்மைக் குடியிருக்க அனுமதிக்குமாறு வற்புறுத்தினர் என ஈராக்கின் பாதுகாப்பு அமைச்சர் காசிம் தாவூத் தெரிவித்தார்.

பலூஜா நகரில் பொதுமக்கள் குடியிருப்பதற்கான எவ்வித அடிப்படைவசதியும் இல்லை. அதனுடன் தொடர்ந்தும் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன. நகரத்தில் மின்சார விநியோகம், குடிநீர் விநியோகம் என்பன இல்லை. இடிந்த கட்டடங்கள் அகற்றப்படவில்லையென பலூஜாவின் அமெரிக்கக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

மீளத்திரும்பிய மக்களுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் நட்டஈடும் வழங்கப்படவுள்ளதாக ஈராக் உறுதியளித்துள்ளது.

இதேவேளை பாக்தாத்தின் தென்பகுதியில் அமெரிக்க கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 40 கிளர்ச்சிவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதனை விட பாக்தாத்தின் பொலிஸ் நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட [illegible] தாக்குதலில் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டார்.

## சங்கர ராமன் கொலை சூத்திரதாரி ரவி

# தற்கொலை செய்யப்போவதாக பொலிஸ் அதிகாரிக்குக் கடிதம்!

சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரர், அப்பு உட்பட 21 பேரைத் தனிப்படைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் ரவி சுப்பிரமணியம் தொடர்ந்தும் பொலிஸ பிடியில் சிக்காமல் தலைமறைவாக இருக்கிறார்.

சங்கர மடத்துக்கு நெருக்கமான ரவி சுப்பிரமணியம் மடத்தின் சார்பில் கட்டப்படும் அனைத்துக் கட்டட வேலைகளையும் ஒப்பந்தம் எடுத்துச் செயற்படுத்தி வந்தார். இதன் மூலம் ஜெயேந்திரரின் அந்தரங்க விடயங்களைப் பகிர்ந்துகொள்ளும் அளவுக்கு ரவி நெருக்கமானவர் ஆனார்.

சங்கரராமனைக் கொலைசெய்யுமாறு ரவி சுப்பிரமணியத்திடம் ஜெயேந்திரர் தெரிவித்ததாகவும் அவர் அப்புவிடம் தெரிவித்து கூலிப்படை மூலம் கொலை செய்ததாகவும் முக்கிய குற்றவாளியான கதிரவன் பொலிஸாரிடமும் நீதிவான் முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

முதலில் டெல்கியில் பதுங்கியிருப்பதாகக் கூறப்பட்ட ரவி சுப்பிரமணியம் மாறு வேடங்களில் சுற்றிவருவதாகப் பரபரப்பாகப் பேசப்பட்டது. இதனால் ரவி சுப்பரமணியத்தை மொட்டையடித்து, மீசையில்லாமல், தாடியுடன், சர்தாஜி வேடத்தில் என்று பல உருவங்களை கணினி மூலம் வரைந்து டெல்கியில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸார் அனுப்பியுள்ளனர்.

இந்த நிலையில் காஞ்சிபுரம் மாவட்டப் பொலிஸ் அதிகாரி பிரேம்குமாருக்கு நேற்று முன்தினம் ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தை ரவி சுப்பிரமணியம் எழுதியிருந்தார். அதில் "அப்பு சரணடைந்துள்ளார். நான் சங்கரராமன் கொலை தொடர்பாக பல தகவல்களை பொலிஸாரிடம் தெரிவிப்பேன். இதுவரை சொகுசாக வாழ்ந்துவிட்டு சிறையில் அடைக்கப்பட்டுக் கிடப்பதை எண்ணிப் பார்க்க முடியவில்லை. நான் தற்கொலை செய்து என்னுயிரை விடுவதைத் தவிர வேறு வழியில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதம் போபாலில் இருந்து அனுப்பியிருப்பதை தபால் முத்திரை மூலம் பொலிஸார் கண்டுபிடித்தனர். போபாலில் இருக்கும் ரவி சுப்பிரமணியத்தைக் கைது செய்ய தனிப்படையினர் போபால் விரைந்துள்ளனர்.

ஏற்கனவே அப்பு கைதாவதற்கு முன்பு தெலுங்கு தொலைக்காட்சிக்கும் தமிழ் வாரப்பத்திரிகைகளுக்கும் பேட்டியளித்தார். பேட்டி வெளியானதும் அப்பு கைதுசெய்யப் பட்டார். இதேபோல் தற்போது போபாலில் இருக்கும் ரவி சுப்பிரமணியம் தமிழ் வாரப் பத்திரிகைக்கு பிரத்தியேகப் பேட்டியளித்துள்ளார். அதில் "சங்கரராமன் கொலையில் ஜெயேந்திரரின் பங்கு" பற்றி விரிவாகத் தெரிவித்துள்ளார்.

ரவி சுப்பிரமணியம் பிடிபட்டால் சங்கரராமன் கொலைவழக்குக்கு பொலிஸார் முடிவுரை எழுதிவிடலாம் என்ற அளவுக்குப் பல அதிர்ச்சித் தகவல்களை வெளியிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உரும்பிராயில் நேற்று முரளி நினைவு நிகழ்வு

இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் முரளி உட்பட 10 மாவீரர்களின் 17ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று உரும்பிராயில் அனுஷடிக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரை யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை கோப்பாய் அரசியற்துறைப்பொறுப்பாளர் சங்கர் ஏற்றி வைத்தார்.

மேஜர் முரளியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை முரளியின் தாயார் ஏற்றிவைத்து மலர் மாலை அணிவித்தார். முரளியுடன் வீரச்சாவடைந்த கப்டன் நிரா, கப்டன் நித்தி, லெப்ரினன்ட் தர்சினி வீரவேங்கை நிர்மலா, வீரவேங்கை நிதி, வீரவேங்கை பஞ்சன் வீரவேங்கை மிகிந்தா, வீரவேங்கை சுதா, வீரவேங்கைஅமுதன் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு சிறப்பு விருந்தினர்களால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நினைவுரையை யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன், கோப்பாய் அரசியற்துறைப் பொறுப்பாளர் சங்கர் ஆகியோர் நிகழ்த்தினர். யாழ் .கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் பகீரதன் மற்றும் பெருமளவு பொது மக்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# நோர்வே தூதரகம் மீண்டும் திறக்கப்பட்டது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் நேற்று மீளவும் திறக்கப்பட்டு அதன் வழமையான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நோர்வே தூதரகத்திற்கு வெள்ளை நிறப்பவுடர் கடிதம் மூலம் அனுப்பப்பட்டதை அடுத்து இது அந்தராக்ஸ் ஆக இருக்கலாமெனக் கருதி தூதரகம் மூடப்பட்டதுடன், அந்த பவுடரும் பரிசோதனைக்காக நோர்வேக்கு அனுப்பப்பட்டது.

இவ்வாறு பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட பவுடர் அந்தராக்ஸ் இல்லையெனவும் இது வெறும் பவுடர்தான் எனவும் பரிசோதனை முடிவுகள் தெரிவித்ததையடுத்தே நேற்று தூதரகம் மீளவும் திறக்கப்பட்டது.

## பெண் புலிகளின்...

இடுப்புப் பட்டிகளைக் கழற்றி பயணப் பையில் வைக்குமாறு கூறினார். தமது படைப்பிரிவிற்கு உட்பட்ட 52-2 ஹபரணைச் சந்திவரை இடுப்பில் இடுப்புப் பட்டி அணிந்து வர தன்னால் அனுமதிக்க முடியாது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இந்த இடுப்புப் பட்டியுடன்தான் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஏற்கனவே இப்படியான பயணங்களின்போதுகூட இந்த இடுப்புப் பட்டி அணிந்தவாறே இவர்கள் பயணம்செய்து வருகிறார்கள்.

இப்படியான சூழ்நிலையில் இராணுவ அதிகாரியொருவரின் இந்த புதிய அணுகுமுறை அநாகரிகமான செயல் என விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைமைப்பீடம் இராணுவ தலைமையகத்துடன் தொடர்பு கொண்டபோதிலும் பயணத்தைத் தொடர்வதற்கு சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை. நான்குமணி நேரம இந்த இழுபறி நிலை நீடித்தது. இறுதியில் இராணுவத் தலைமையகத்திலிருந்து வந்த உத்தரவின் பேரில் பயணம் ரத்துச் செய்யப்பட்டது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தனது வன்மையான கண்டனத்தையும், அதிருப்தியையும் வெளியிட்டுள்ளார்.

எமது பெண் போராளிகள் அமைப்பின் சட்டதிட்டத்திற்கு அமைய இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசததில் இடுப்புப்பட்டி அணிந்து அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபடுவது புதிய விடயமல்ல. எனவே, இராணுவம் நடந்துகொண்ட விதம் ஒரு அநாகரிகமான அணுகுமுறை. திட்டமிட்டு எமது பேராளிகளை அவமதிக்கும் வகையில் நடந்துள்ளது என்று ஊடகவியலாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

# வீடுகளை விடுவிக்கக்கோரி உசன் மக்கள் போராட முடிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி, உசன் பகுதியில் வீடுகளில் முகாம் அமைத்து நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேறுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இராணுவ அதிகாரிகளுடன் நாளை நடைபெறவுள்ள சந்திப்பில் இணக்கம் ஏற்படாவிட்டால் வீதிகளில் இறங்கிப் போராடுவதற்கு அந்தப் பகுதி மக்கள் தீர்மானித்துள்ளனர்.

உசன் பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் அமைந்துள்ள வீடுகளின் உரிமையாளர்கள், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள உசன் பகுதியில் மீளக் குடியமர்வதற்கு இராணுவத்தினர் தொடர்ந்தும் தடைவிதித்து வருகின்றனர். இதனால் உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வாழவேண்டியுள்ளதுடன் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர் நோக்கி வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாததிட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் அந்த உடன்படிக்கையில் உள்ள சரத்துக்களின்படி பொது மக்களின் வீடுகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்ற சரத்தினை நடைமுறைப்படுத்தாமை உசன் பகுதி மக்களிடம் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தமது சொந்த வீடுகளில் மீளக்குடியமர, அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து, நாளை இது தொடர்பாக அந்தப் பிரதேச மக்களுடன் நடைபெறவிருக்கின்ற சந்திப்பில் இணக்கம் தெரிவிக்க படையினர் மறுப்புத் தெரிவித்தால் - அதனை எதிர்த்து முகாமுக்கு முன்பாகப் போராட்டம் நடாத்தப்போவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தமது நிலைப்பாடு தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு, பலாலி இராணுவக் கட்டளை அதிகாரி, யாழ்.மாவட்ட அரசியற்துறை ஆகியவற்றுக்கு தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர் ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

## 10 அகதிகள் திரும்பினர்!

தமிழக சிவகங்கை மாவட்ட மூங்கில் ஊறணி அகதி முகாமைச் சேர்ந்த ஈழத்தமிழர்கள் பத்துப்பேர் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மீன்பிடிப்படகு ஒன்றின் மூலம் தலைமன்னார் கரையை நேற்று வந்தடைந்தனர்.

இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர்.

## கடற்படை...

சேவையின் பணிப்பாளராகவும் -

கொமடோர் சோமதிலக திஸநாயக்க வடக்கு கடற்பகுதி பிரதிக் கட்டளை அதிகாரியாகவும், கொமடோர் எஸ்.எம்.வி.வீரசேகர நலன் புரி பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கை தலைமையகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் கொமடோர் திசேர சமரசிங்க மேற்படிப்பிற்காக இந்தியாவுக்கு செல்வதனால் அந்தப் பதவிக்கு கடற்படையின் நடவடிக்கைப் பணிப்பாளர் கொமடோர் ஜயந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். (தே)

## எந்த...

காக - படையினருக்கு சிறந்த பயிற்சிகள் அளிக்கப்படவேண் டும். அத்துடன் படையினர் எந்த நேரமும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தமக்குக்கீழ் பயிற்சிபெறும் படையினருக்கு சிறந்த பயிற்சி, மற்றும் தலைமைத்துவ நன்னெறிகளை போதிக்கவேண்டிய பொறுப்பு இராணுவக் கட்டளை அதிகாரிகளுக்கே உரியது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## றிச்சட்...

யின் தற்போதை நிலைமைகள் தொடர்பாக மிலிந்த மொறகொட எடுத்து விளக்கினார்.

அமெரிக்கா செல்லமுன்னர் மிலிந்த மொறகொட பிரிட்டனுக்கு சென்றார். பிரிட்டன் வெளியுற அமைச்சர் மற்றும் பொது நலவாய அமைப்பின் அழைப்பையேற்று அங்கு சென்ற மிலிந்த மொறகொட, பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலர் டொன் மக்கெனனுடன் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்.

# ஜே.வி.பி அமைச்சரும், எம்.பிக்களும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம்

கால்நடை அபிவிருத்தி மற்றும் விவசாய அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க (ஜே.வி.பி) தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருடன் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்து கால்நடை மற்றும் விவசாயத்துறைகளுக்கு வெள்ளத்தால் ஏற்பட்ட இழப்புகள் குறித்து ஆராய்ந்தார்.

அம்பாறை மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட இவர் நேற்று மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் வசந்த தசநாயக்க பீ.சந்திரசேகரன் ஆகியோரும் வருகை தந்தனர்.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டக்களப்பிற்கு உத்தியோகபூர்வ ரீதியிலோ அல்லது தனிப்பட்ட ரீதியிலோ மேற்கொண்ட முதலாவது விஜயம் இது வென்பது குறிப்பிடத்தக்கது. இவர்களது விஜயம் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சிவில் அதிகாரிகளுக்கு கடைசி நேரத்திலேயே அறிவிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் சண்முகம் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் - கால்நடை மற்றும் விவசாயத் துறைகளுக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து விரிவாக அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய நேரத்தில் இவர்களது விஜயம் தொடர்பான தகவல்கள் கிடைக்காததால் மாநாடு முடியும் கட்டத்திலேயே தமிழ் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்கள் நால்வரும் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனியாக அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க சந்தித்து வெள்ளத்தால் ஏற்பட்ட மேலதிக பாதிப்புகளை கேட்டறிந்து கொண்டார். ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினரின் இந்த விஜயத்தை முன்னிட்டு மட்டக்களப்பு நகரில் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## எந்த நகர்வையும்...

கொள்ளமுடியாத வகையில் சிறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்சி இரு பக்கங்களாலும் நெருக்குதல்களை எதிர் கொண்டுள்ளது.

ஜே.வி.பி அரசாங்கத்தில் இருக்கும்வரை சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியாது என்று உலக நாடுகள் பல அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஜே.வி.பி இல்லாமல் அரசாங்கம் தொடர்ந்து செயற்பட முடியாது. இத்தகைய நெருக்குதல்கள் மத்தியிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காக ஜே.வி.பியைப் பகைத்துக் கொள்ள முடியாது.

ஜே.வி.பியை தக்கவைத்துக் கொள்வதற்காக பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகமுடியாது என்று மேலும் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை பட்டதாரிகள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டுமென்று உறுதியளித்தார்.

எனினும் அடுத்த நாள் அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்து 40 ஆயிரம் பட்டதாரிகளின் நியமனங்களையும், பயிற்சி நியமனங்களாக வழங்குமாறு அவர் உத்தரவிட்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

NEW SCIENCE HALL
2007 A/L
கணித உயிரியல் பிரிவு
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம் 27.12.2004
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்
G/3513



பொதி விநியோக சேவையில் TNT யின்
பண்டிகைக்கால விசேட சலுகை
இனிய நத்தார்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உங்கள் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சர்வதேச கூரியர் சேவை, உள்நாட்டு கூரியர் சேவை, சர்வதேச தபால் சேவைகளுக்கு 15% விசேட கழிவு வழங்குகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
15% விசேட கழிவு
இச்சலுகை 2005 ஜனவரி 15 வரை மட்டுமே!
தொடர்புகளுக்கு:
TNT கூரியர் சேவை,
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பழைய பெரிய தபால் கந்தோர் முன்பாக)
T.P: 021-2223771, 0777-270452,
0777-915824
பொதிகளை அனுப்புபவர்களுக்கு TNT யின் அன்பளிப்பு பரிசு (Compliments) காத்திருக்கின்றன.
...உங்கள் அன்பினையும் எடுத்துச் சென்று சேர்க்கின்றோம் என்பதை மறந்து விடாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.